# ஏழு எக்காளங்களின் வெளிப்பாடு

## பகுதி 2

**(The Revelation of The Seven Trumpets – Part 2)**

பிப்ரவரி **14**, 2016, கல்வாரி சபை, சென்னை

**(February 14, 2016, Calvary Tabernacle, Chennai)**


போதகர் **A.** சாமுவேல்

**(Pastor A. Samuel)**

கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமம் மகிமைப்படுவதாக. இன்றைக்கு ஏழு எக்காளங்களின் வெளிப்பாடு - இரண்டாம் பாகம். இந்த எக்காளங்களைப் பற்றிய வெளிப்பாட்டை நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டுமென்றால் வெளிப்படுத்தின விசேஷத்தில் இருக்கிற ஏழு எக்காளங்களைப் பற்றி நீங்கள் படிக்கவேண்டும். வெளி 8: 7 – 13 வரை முதல் நான்கு எக்காளங்களைக் குறித்து வாசிக்கிறோம். வெளி 9: 1 – 11 வரை ஐந்தாம் எக்காளத்தைக் குறித்தும், வெளி 9: 12 – 21 வரை ஆறாம் எக்காளத்தைக் குறித்தும், வெளி 11: 15 – 19 வரை ஏழாம் எக்காளத்தைக் குறித்தும் வாசிக்கிறோம். அது எங்கே இருக்கிறதென்று முதலாவது நமக்குத் தெரியவேண்டும். அதின்மேல் நமக்கு ஒரு ஆர்வம் **(interest)** வேண்டும். இவ்விதமான அருமையானச் செய்தியைக் கொடுக்கும்போது நீங்கள் எந்த அளவிற்கு ஆர்வமாகக் கேட்கிறீர்கள் என்று நான் பார்க்கிறேன். ஆண்டவரும் அதைப் பார்க்கிறார். வெளிப்பாடு வரும்போது களிகூரவேண்டும். நம்முடைய வாழ்க்கையைப் பொருத்திப் பார்க்கவேண்டும். ஆண்டவர் நம்முடைய தவறை வெளிப்படுத்தினால் கீழ்ப்படியவேண்டும். அறிக்கை செய்யவேண்டும். ஜீவபலியாக நம்மை ஒப்புக்கொடுப்பதுதான் தேவனுக்குப் பிரியமான ஆராதனை. அதுதான் புத்தியுள்ள ஆராதனை.

## வெளி 8: 7-13

7. முதலாம் தூதன் எக்காளம் ஊதினான்; அப்பொழுது இரத்தங்கலந்த கல்மழையும் அக்கினியும்உண்டாகி, பூமியிலே கொட்டப்பட்டது; அதினால் மரங்களில் மூன்றிலொருபங்கு வெந்துபோயிற்று, பசும்புல்லெல்லாம் எரிந்துபோயிற்று.
8. இரண்டாம் தூதன் எக்காளம் ஊதினான்; அப்பொழுது அக்கினியால் எரிகிற பெரிய மலைபோன்றதொன்று சமுத்திரத்திலே போடப்பட்டது; அதினால் சமுத்திரத்தில் மூன்றிலொருபங்கு இரத்தமாயிற்று.
9. சமுத்திரத்திலிருந்த ஜீவனுள்ள சிருஷ்டிகளில் மூன்றிலொருபங்கு செத்துப்போயிற்று; கப்பல்களில் மூன்றிலொருபங்கு சேதமாயிற்று.
10. மூன்றாம் தூதன் எக்காளம் ஊதினான்; அப்பொழுது ஒரு பெரிய நட்சத்திரம் தீவட்டியைப்போல எரிந்து, வானத்திலிருந்து விழுந்தது; அது ஆறுகளில் மூன்றிலொருபங்கின்மேலும், நீரூற்றுகளின்மேலும் விழுந்தது.
11. அந்த நட்சத்திரத்திற்கு எட்டியென்று பெயர்; அதினால் தண்ணீரில் மூன்றிலொருபங்கு எட்டியைப்போலக் கசப்பாயிற்று; இப்படிக் கசப்பான தண்ணீரினால் மனுஷரில் அநேகர் செத்தார்கள்.
12. நான்காம் தூதன் எக்காளம் ஊதினான்; அப்பொழுது சூரியனில் மூன்றிலொரு பங்கும், சந்திரனில் மூன்றிலொருபங்கும், நட்சத்திரங்களில் மூன்றிலொருபங்கும் சேதப்பட்டது, அவற்றவற்றில் மூன்றிலொருபங்கு

இருளடைந்தது; பகலிலும் மூன்றிலொருபங்கு பிரகாசமில்லாமற்போயிற்று, இரவிலும் அப்படியேயாயிற்று.

13. பின்பு, ஒரு தூதன் வானத்தின் மத்தியிலே பறந்துவரக்கண்டேன்: அவன் மகா சத்தமிட்டு: இனி எக்காளம் ஊதப்போகிற மற்ற மூன்று தூதருடைய எக்காளசத்தங்களினால் பூமியில் குடியிருக்கிறவர்களுக்கு ஐயோ, ஐயோ, ஐயோ, (ஆபத்துவரும்) என்று சொல்லக்கேட்டேன்.

**ரூத் 1: 1-8**

1. நியாயாதிபதிகள், நியாயம் விசாரித்துவரும் நாட்களில், தேசத்திலே பஞ்சம் உண்டாயிற்று; அப்பொழுது யூதாவிலுள்ள பெத்லெகேம் ஊரானாகிய ஒரு மனுஷன் தன் மனைவியோடும் இரண்டு குமாரரோடுங்கூட மோவாப் தேசத்திலே போய்ச் சஞ்சரித்தான்.

2. அந்த மனுஷனுடைய பேர் எலிமெலேக்கு, அவன் மனைவியின் பேர் நகோமி, அவனுடைய இரண்டு குமாரரில் ஒருவன் பேர் மக்லோன், மற்றொருவன் பேர் கிலியோன்; யூதாவிலுள்ள பெத்லெகேம் ஊராகிய எப்பிராத்தியராகிய அவர்கள் மோவாப்தேசத்திற்குப் போய், அங்கே இருந்துவிட்டார்கள்.

3. நகோமியின் புருஷனாகிய எலிமெலேக்கு இறந்துபோனான்; அவளும் அவளுடைய இரண்டு குமாரரும்மாத்திரம் இருந்தார்கள்.

4. இவர்கள் மோவாபியரில் பெண்கொண்டார்கள். அவர்களில் ஒருத்தி பேர் ஓர்பாள், மற்றவள் பேர் ரூத். அங்கே ஏறக்குறையப் பத்துவருஷம் வாசம்பண்ணினார்கள்.

5. பின்பு மக்லோன் கிலியோன் என்னும் அவர்கள் இருவரும் இறந்துபோனார்கள்; அந்த ஸ்திரீ தன் குமாரர் இருவரையும் தன் புருஷனையும் இழந்து தனித்தவளானாள்.

6. கர்த்தர் தம்முடைய ஜனங்களைச் சந்தித்து, அவர்களுக்கு ஆகாரம் அருளினார் என்று அவள் மோவாப்தேசத்திலே கேள்விப்பட்டு, தன் மருமக்களோடே கூட மோவாப் தேசத்திலிருந்து திரும்பிவரும்படி எழுந்து,

7. தன் இரண்டு மருமக்களோடுங்கூடத்தானிருந்த ஸ்தலத்தை விட்டுப் புறப்பட்டாள். யூதா தேசத்திற்குத் திரும்பிப்போக, அவர்கள் வழிநடக்கையில்,

8. நகோமி தன் இரண்டு மருமக்களையும் நோக்கி: நீங்கள் இருவரும் உங்கள் தாய்வீட்டுக்குத் திரும்பிப்போங்கள்; மரித்துப்போனவர்களுக்கும் எனக்கும் நீங்கள் தயைசெய்ததுபோல, கர்த்தர் உங்களுக்கும் தயைசெய்வாராக.

உங்களுக்கு ரூத்தின் புஸ்தகம் நான்கு அதிகாரங்களும் தெரிந்தால்தான் இந்தச் செய்தி உங்களுக்குப் புரியும். இப்போது தெரியவில்லை என்றால் வீட்டிற்குப்போய் படித்துப் பாருங்கள். வேதத்தை அறியாமல் இந்த நேரத்திற்குரியச் செய்தியைப் புரிந்துகொள்ள முடியாது.

சில போதகர்கள் வேதத்தை அறியாமலேயே போதகர்களாய் மாறியிருக்கிறார்கள். மிகவும் வேதனைக்குரிய காரியம். சில தீர்க்கதரிசியின் புஸ்தகத்தைப் படித்துப் பிரசங்கம்பண்ணுகிறார்கள். அவர்கள் முழுமையான செய்தியைக் கொடுக்கமுடியாது. விசுவாசிகளுக்கும் வேதம் நன்றாகத் தெரிந்தால்தான் செய்தியைப் புரிந்துகொள்ளமுடியம். நான் இந்த நேரத்திற்குரியச் செய்தியை உங்களுக்கு வேதத்தில் காண்பிக்கிறேன். வேதத்தில் நீங்கள் எங்கே இருக்கிறீர்கள் என்பதைக் காண்பிக்கிறேன். பரிசுத்தஆவியின் உதவியினால் நான் அதைச் செய்கிறேன். நீங்கள் கவனமாகக் கேட்டால், தாகத்தோடு இருப்பீர்களென்றால் இயேசுகிறிஸ்து உங்கள் தாகத்தைத் தீர்ப்பார்.

ரூத்தின் புஸ்தகம் முதலாம் அதிகாரத்தில் நான்கு நபர்களை நாம் பார்க்கிறோம். எலிமெலேக்கு **(Elimelech)**, அவனுடைய மனைவி நகோமி **(Naomi)**, அவனுடைய மகன்கள் மக்லோன் **(Mahlon)** மற்றும் கிலியோன் **(Chilion)**. நான்கு பேரும் யூதா கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள். தங்களுடைய சொந்த ஊராகிய பெத்லெகேமிலிருந்து மோவாப் தேசத்திற்குப் போகிறார்கள். பத்து வருடங்கள் அங்கே சஞ்சரிக்கிறார்கள். ஏனென்றால் பெத்லெகேமில் பஞ்சம் இருக்கிறது. ரூத் முதலாம் அதிகாரத்தில் என்ன நடந்தது? எலிமெலேக்கு இறந்துபோனான். அவனுடைய இரண்டு பிள்ளைகளும் இறந்துபோனார்கள். இரண்டு மருமக்கள் இருக்கிறார்கள். அவர்கள் மோவாப் தேசத்தைச் சேர்ந்தவர்கள். ஒருவள் பேர் ஒர்பாள் **(Orpah)**, மற்றவள் பேர் ரூத் **(Ruth)**. இப்போது கர்த்தர் தம்முடைய ஜனங்களைச் சந்தித்தார் என்றும் அவர்களுக்கு ஆகாரம் அருளினார் என்றும் நகோமி கேள்விப்படுகிறாள். தன்னுடைய மருமக்களைக் கூட்டிக்கொண்டு பெத்லெகேமுக்குத் திரும்புகிறதை நாம் வாசிக்கிறோம். அப்பொழுது ஒர்பாள் முத்தம் கொடுத்துவிட்டுத் திரும்பிப் போய்விட்டாள். உலகத்தை நோக்கிப் போய்விட்டாள். உலக ஆசை அவளுக்கு. தொலைக்காட்சி பார்ப்பதற்கும், உலக காரியங்களுக்கும் அவள் அடிமையாக **(addict)** இருக்கிறாள். நாம் தேவனுடைய வார்த்தைக்கு அடிமைகளாய் இருக்கிறோம். அல்லேலூயா. அதைக் கேட்பதில் நமக்கு மிகவும் பிரியம். ஒர்பாள் முத்தமிட்டுப்போனாள். ரூத்தோ விடாமல் பற்றிக்கொண்டாள் என்று வேதத்தில் வாசிக்கிறோம். 16ம் வசனத்தில் அவளுடைய தீர்மானத்தைப் பற்றி வாசிக்கிறோம் **(Ruth Deciding)**. 22ம் வசனத்தில் அவர்கள் வரும்போது அது அறுவடை நேரமாயிருந்தது

**(Harvest Time)** என்று வாசிக்கிறோம். முதலாவது வாற்கோதுமை **(barley)**, இரண்டாவது கோதுமையை **(wheat)** அறுவடை செய்வார்கள்.

2ம் அதிகாரத்தில், அறுவடை நேரத்தில் ரூத் நகோமியோடுகூட பெத்லெகேமில் இருக்கிறாள். அவள் கதிர் பொறுக்கப் போகும்போது அங்கே அறுக்கிறவர்கள்மேல் கண்காணியாக **(Chief Reaper)** ஒருவன் இருக்கிறான். அந்த கண்காணியிடத்தில் போய் "நான் உங்கள் வயலில் கொஞ்சம் கதிர் பொறுக்க எனக்கு அனுமதி தாருங்கள்" என்று கேட்கும்போது அவன் சரி என்று கூறுகிறான். அந்த நேரத்தில்தான் போவாஸ் **(Boaz)** வருகிறான். இந்தப் பெண் யார் என்று கேட்கும்போது, "இந்தப் பெண் கதிர் பொறுக்கும்படி என்னிடம் கேட்டுக்கொண்டாள். காலையில் இருந்து இங்கேதான் இருக்கிறாள்" என்று அந்த கண்காணி சொல்லுகிறான். உடனே போவாஸ் ரூத்தைப் பார்த்து, "அறுவடை முடியுமட்டும், அதாவது வாற்கோதுமை மற்றும் கோதுமை அறுவடை (சுமார் மூன்று மாதங்கள் நடக்கும்) இரண்டும் முடியுமட்டும் நீ வேறே வயலுக்குப் போகாமல் என்னுடைய ஊழியக்காரப் பெண்களோடுகூடவே இரு" என்று சொல்லுகிறான். தன் வேலைக்காரர்களைப் பார்த்து "நீங்கள் அவளுக்காக அரிகளிலே சிலதைச் சிந்தவிடுங்கள். அவளை அற்பமாக நினைக்காதீர்கள்" என்றும் சொல்லுகிறான். எனவே அறுவடைக் காலம் முடியும்வரை அவள் வயலில் கதிர் பொறுக்கும் வேலையைச் செய்கிறாள் **(Ruth Serving)**. இதைத்தான் நாம் 2ம் அதிகாரத்தில் வாசிக்கிறோம்.

3ம் அதிகாரத்தில் பார்க்கும்போது, நகோமி ரூத்தைப் பார்த்து "அந்த அறுவடையின் எஜமான் போவாஸ் நம்முடைய நெருங்கிய இனத்தான் **(Kinsman Redeemer)**. நான் சொல்லுகிறதை நீ கேள். அவன் இரவில் புசித்துக் குடித்து அம்பாரத்தின் அடியில் படுத்திருக்கும்போது நீ போய் அவனுடைய கால்களின்மேல் மூடியிருக்கிற போர்வையை ஒதுக்கி நீ படுத்துக்கொள். அப்பொழுது நீ செய்யவேண்டியது இன்னதென்று அவன் உனக்குச் சொல்லுவான்" என்று கூறுகிறாள். அதின்படி ரூத் அங்கே போகும்போது நடுராத்திரியில் போவாஸ் பார்க்கும்போது ஒரு பெண் அவன் காலடியில் படுத்திருக்கிறாள். "நீர் என்னுடைய சுதந்தரவாளி" என்று அவள் சொல்லுகிறாள். "நான் சுதந்தரவாளி என்பது மெய்தான். ஆனால் என்னைவிட நெருங்கிய சொந்தக்காரன் ஒருவன் இருக்கிறான். அவன் உன்னைச் சுதந்தரமுறையாய் விவாகம்பண்ணினால் பார்க்கலாம் அல்லது நான் உன்னை சுதந்தரமுறையாய் விவாகம்பண்ணுவேன்" என்று சொல்லி

ஆறு படி கோதுமையைக் கொடுத்து அவளை வீட்டிற்கு அனுப்புகிறான். அப்பொழுது நகோமி "அந்த மனிதன் உனக்குச் சொன்னதை நிறைவேற்றும்வரை இளைப்பாறமாட்டான். நீ பொறுமையாய் இரு" என்று சொல்லுகிறாள். அவள் இளைப்பாறிக்கொண்டிருக்கிறாள் **(Ruth Resting)**.

4ம் அதிகாரத்தில், ஒலிமுகவாசலில் பத்து மூப்பர்கள் மத்தியில் போவாஸ் அங்கே நெருங்கிய இனத்தானோடு பேசும்போது அவன் "நான் நிலத்தை மீட்டுக்கொள்கிறேன். ஆனால் அந்தப் பெண்ணை விவாகம் செய்யமுடியாது. நான் என் சுதந்தரத்தைக் கெடுக்காதபடி அவளை விவாகம் செய்யமாட்டேன்" என்று சொல்லிவிட்டான். அப்பொழுது போவாஸ் மூப்பர்கள் மத்தியில் "நான் எலிமெலேக்கு, மக்லோன், கிலியோன் என்பவர்களுடைய நிலத்தை மீட்டுக்கொள்கிறேன். மரித்தவனுடைய பேரை நிலைக்கப்பண்ணவேண்டும் என்று சொல்லி இருக்கிற அந்த வார்த்தையின்படி ரூத்தையும் நான் இன்றைய தினத்தில் விவாகம்பண்ணுகிறேன்" என்று எல்லாருக்கும் முன்பாகக் **(Public Testimony)** கூறினான். பின்பு நகோமியும், போவாசும், ரூத்தும் அவர்கள் சுதந்தரத்தில் வாசம்பண்ணும்போது நகோமி அந்த பேரப்பிள்ளையை வளர்க்கிறவளாக மாறினாள் என்று 4ம் அதிகாரத்தில் எழுதியிருக்கிறது **(Marriage & Future Home)**. இவ்விதமாக வேதத்தில் ஒரு நடந்த சம்பவத்தை நமக்கு அருமையான ஒரு கதையைப்போல் எழுதியிருக்கிறது.

சகோ. பிரன்ஹாம் "இனத்தான் மீட்பர்" **(Kinsman Redeemer)** என்ற தலைப்பில் செய்தி கொடுத்திருக்கிறார். மிக முக்கியமான செய்தி. இந்த ரூத்தின் புஸ்தகம் 4ம் அதிகாரத்தைப்பற்றியும் அவர் சொல்லுகிறார். இதை எல்லாருமே புரிந்துகொள்ளலாம். ஆனால் இதில் ஏழு எக்காளங்கள் இருக்கிறது. அதைத்தான் நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். ஏழு எக்காளங்களைப்பற்றி வெளிப்படுத்தின விசேஷம் 8, 9 மற்றும் 11ம் அதிகாரங்களில் இருக்கும் சம்பவங்கள் இதில் அடங்கியிருக்கிறது. ஏழு எக்காளங்கள் இதில் எப்படி வருகிறதென்பதைத்தான் இன்றைக்கு நாம் பார்க்கப்போகிறோம்.

ஏழு பண்டிகைகளைக் குறித்து லேவியராகமம் 23ம் அதிகாரத்தில் வாசிக்கிறோம். அவைகள்: பஸ்கா பண்டிகை **(Feast of Passover),** புளிப்பில்லா அப்பப்பண்டிகை **(Feast of Unleavened Bread),** முதற்பலன்களின் பண்டிகை **(Feast of Firstfruits),** பெந்தெகொஸ்தே

பண்டிகை **(Feast of Pentecost),** எக்காளப் பண்டிகை **(Feast of Trumpet),** பாவநிவிர்த்தி பண்டிகை **(Feast of Atonement)** மற்றும் கூடாரப்பண்டிகை **(Feast of Tabernacle)**. இயேசுகிறிஸ்து நமக்காகச் சிலுவையில் மரிப்பது பஸ்கா பண்டிகை. புளிப்பில்லா அப்பப்பண்டிகை இராப்போஜனமாய் இருக்கிறது. முதற்பலன்களின் பண்டிகை உயிர்த்தெழுதலாய் இருக்கிறது. பெந்தெகொஸ்தே பண்டிகை ஏழு சபைக்காலங்களைக் குறிக்கிறது. இப்பொழுது நாம் எக்காளப் பண்டிகையில் வந்திருக்கிறோம். எக்காளப் பண்டிகை என்ன செய்கிறதென்றால், ஏழாம் மாதம் 1ம் தேதியிலே எக்காளத்தை ஊதும்போது ஜனங்கள், பன்னிரண்டு கோத்திரத்தாரும் இஸ்ரவேல் நாட்டின் பல பாகங்களில் இருந்து எருசலேமுக்கு வரவேண்டும். எதற்காக? பலியை அங்கீகரிப்பதற்காக **(To recognize the Sacrifice)**. பாவநிவிர்த்தி செய்யத்தக்கதாக பாவநிவிர்த்தி பண்டிகைக்கு அவர்கள் வரவேண்டும். எக்காளப் பண்டிகை இஸ்ரவேல் ஜனங்களைத் தங்கள் சொந்த தேசத்தில் கூட்டிச் சேர்க்கிறது **(Gathering of Israel)**. இன்றைக்கு அது நடந்துக்கொண்டிருக்கிறது. இப்பொழுது நடந்துக்கொண்டிருக்கிறது. எல்லா இடத்திலும் ஆசாரியன் எக்காளத்தை ஊதும்போது அவர்கள் எல்லாரும் புறப்பட்டு எருசலேமுக்கு வருவார்கள். எதற்காக? பாவநிவிர்த்தி பண்டிகைக்காக.

ஏழாம் மாதம் 10ம் தேதி பாவநிவிர்த்தி பண்டிகை என்று எழுதப்பட்டிருக்கிறது **(**லேவி 23: 26-32**)**. பாவநிவிர்த்தி பண்டிகை அன்று ஆசாரியன் என்ன செய்கிறான்? தனக்காக ஒரு காளையை பலிசெலுத்துகிறான். அதின் இரத்தத்தில் கொஞ்சம் எடுத்து, தனக்காக கிருபாசனத்தில் ஏழுதரம் இரத்தத்தைத் தெளிக்கிறான். ஜனங்களுக்காக ஒரு வெள்ளாட்டுக் கடாவை பலிசெலுத்துகிறான். இன்னொரு ஆடு சீட்டுப்போட்டு அது போக்காடாக **(scapegoat)** அனுப்பப்படுகிறது. பலி ஆடு அங்கே பலிசெலுத்தப்படும்போது, அதின் இரத்தத்தில் கொஞ்சம் எடுத்து ஜனங்களுக்காக அதை கிருபாசனத்தில் ஏழுதரம் தெளிக்கும்போது ஜனங்களுடைய அந்த வருஷத்துப் பாவம் மன்னிக்கப்படுகிறது. மலைபோல் சேர்ந்துபோன அவர்களுடைய பாவம், பாவநிவிர்த்தி பண்டிகை அன்று ஒழிந்துபோகிறது. அதற்குப்பிறகு அடுத்த வருஷத்தில் பாவநிவிர்த்தி செய்யவேண்டும். இப்படி ஒவ்வொரு வருஷமாய் பாவநிவிர்த்தி செய்யம்போது, பிரதான ஆசாரியன் மகா பரிசுத்த ஸ்தலத்தில் சென்று உடன்படிக்கைப் பெட்டிக்கு மேலே இருக்கிற கிருபாசனத்தில் ஏழுதரம்

இரத்தத்தைத் தெளிக்கும்போது அவர்களுடைய பாவம் மன்னிக்கப்படுகிறது. அல்லேலூயா.

இன்றைக்கு நம்முடைய பாவங்களைக் கர்த்தராகிய இயேசுகிறிஸ்து முற்றிலுமாக மன்னித்துவிட்டார். இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்பே நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டாகிவிட்டது. இப்பொழுது அந்த மன்னிப்பை நாம் பெற்றிருக்கிறோம். எத்தனைப்பேர் அதைப் பெற்றிருக்கிறோம்? இயேசுகிறிஸ்து என் பாவத்தை மன்னித்தார் என்று நான்குமுறை நீங்கள் சொன்னால் நீங்கள் பாவத்தைச் செய்யமாட்டீர்கள். அதை வாயினால் அறிக்கைபண்ணவேண்டும். அப்படி அறிக்கைபண்ணினால், நாம் இப்படி அறிக்கைபண்ணியிருக்கிறோமே அதை எப்படி செய்வது என்று நினைப்பீர்கள். வாயில் அறிக்கை இல்லாததால் சிலர் பாவத்தில் ஜீவிக்கிறார்கள். நீங்கள் அறிக்கை செய்தால் உங்கள் மாம்சம் அதற்குக் கீழ்ப்படியும்படி பரிசுத்தஆவியானவர் உங்களுக்கு உதவி செய்வார். அவர் உங்கள் அறிக்கையின்பேரில் செயல்படுகிற பிரதான ஆசாரியராய் இருக்கிறார். அறிக்கை செய்வது **(confession)** நமக்கு மிகவும் அவசியமாய் இருக்கிறது.

அவர்கள் பாவநிவிர்த்திக்கு வரவேண்டும். அதன்பின்பு நீங்கள் லேவி 23: 33-43ம் வசனம்வரைக்கும் வாசிக்கும்போது அங்கே கூடாரப்பண்டிகையைக் குறித்து எழுதியிருக்கிறது. அது எதைக் குறிக்கிறது? ஆயிரவருட அரசாட்சியைக் **(Millennium)** குறிக்கிறது. இப்படியாக அந்த அதிகாரத்தில் எழுதியிருக்கிறது. கடந்த நாளில் யோசேப்பின் சரித்திரத்தை வைத்து உங்களுக்கு ஏழு எக்காளங்களைச் சொன்னேன். இன்றைக்கு அதே மாதிரி ஒரு இணைப்புதான். சிறிது வித்தியாசமாயிருக்கும். அதை நாம் ரூத்தின் புஸ்தகம் நான்காம் அதிகாரத்தில் காணப்போகிறோம்.

முத்திரைகள் மணவாட்டிக்கு சம்பந்தப்பட்டது **(Seals for the Bride)**. அது இரகசியங்களை வெளிப்படுத்துவதையும் **(Revealing of the Secrets)**, வார்த்தையைத் திறந்தளிப்பதையும் **(Opening of the Word)** குறிக்கிறது. எக்காளங்கள் இஸ்ரவேல் ஜனங்களுக்கு சம்பந்தப்பட்டது **(Trumpets for Israel)**. கீழ்ப்படியாத ஆத்துமாக்கள்மேல் வரும் தற்காலிக நியாயத்தீர்ப்புதான் கோபகலசங்கள் **(Vials for those who reject the Message)**. இதைத்தான் நாம் வெளிப்படுத்தின விசேஷத்தில் வாசிக்கிறோம்.

எக்காளங்கள் இஸ்ரவேல் ஜனங்களை ஒன்று சேர்க்கிறது. ஏழு எக்காளங்கள் ஊதப்படுகிறது. அது ஜனங்களைக் கூட்டிச்சேர்க்கிறது. இரண்டு விதமான சேர்க்கப்படுதல் இருக்கிறது. ஒன்று மாம்சத்தின்படி இஸ்ரவேலராய் **(Natural Israel)** இருக்கிறவர்கள் சேர்க்கப்படுதல். மற்றொன்று ஆவிக்குரிய இஸ்ரவேலராய் **(Spiritual Israel)** இருக்கிறவர்கள் சேர்க்கப்படுதல். நாம் ஆவிக்குரிய இஸ்ரவேலராய் இருக்கிறோம். அவர்கள் மாம்சத்தின்படி இஸ்ரவேலராய் இருக்கிறார்கள். அவர்கள் ஆபிரகாமின் மாம்ச பிரகாரமான சந்ததி. நாம் ஆபிரகாமுடைய விசுவாச சந்ததி. அல்லேலூயா. எக்காளம் ஊதப்படும்போது அவர்களை அவர்கள் சொந்த தேசத்தில் கூட்டிச்சேர்க்கிறது. 1948ம் வருடம் இஸ்ரவேல் நாடு உருவானது.

1946ம் வருடம் கர்த்தருடைய தூதனானவர் **(Angel of the Lord)** கிரீன் மில் **(Green Mill)** என்ற இடத்தில் உள்ள குகையில் சகோ. பிரன்ஹாமைச் **(Bro. Branham)** சந்தித்தார். அப்பொழுது கர்த்தருடைய தூதனானவர் "உன் செய்தி உலகமெங்கும் போகும்" என்று சொன்னார். அந்த நாளிலிருந்து செய்தி புறப்பட்டு இன்றைக்கு நம்மை வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட வார்த்தைக்கு **(Promised Word)** கொண்டுவந்திருக்கிறது. அல்லேலூயா. நாம் எங்கே வந்திருக்கிறோம்? இந்தக்காலத்திற்கென்று வாக்களிக்கப்பட்ட வார்த்தையில் வந்திருக்கிறோம். எக்காளங்கள் அவர்களை வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட தேசத்திற்கும் நம்மை வாக்களிக்கப்பட்ட வார்த்தைக்கும் கூட்டிச்சேர்த்திருக்கிறது. நாம் இன்றைக்கு ஏழாம் தூதனின் சத்தத்தின் நாட்களில் இருக்கிறோம். ஏழாம் தூதனின் சத்தமானது தேவரகசியத்தை வெளிப்படுத்துகிறதாய் இருக்கிறது.

இப்பொழுது, ரூத்தின் புஸ்தகத்தை கவனிக்கும்பொழுது, எலிமெலேக்கு, அவனுடைய மனைவி நகோமி மற்றும் இரண்டு பிள்ளைகளாகிய மக்லோனும் கிலியோனும் பெத்லெகேமை விட்டு மோவாப் தேசத்திற்கு வருகிறார்கள். பெத்லெகேம் என்றால் தேவனுடைய அப்பத்தின் வீடு **(Bethlehem – House of God's Bread)** என்று பொருள். அங்கே பஞ்சம் ஏற்பட்டதால் மோவாப் தேசத்திற்கு வருகிறார்கள். என்ன நடக்கிறது? எலிமெலேக்கு முதலாவது மரித்துப்போகிறான்.

**ரூத் 1: 3**

3. நகோமியின் புருஷனாகிய எலிமெலேக்கு இறந்துபோனான்; அவளும் அவளுடைய இரண்டு குமாரரும்மாத்திரம் இருந்தார்கள்.

இரண்டு குமாரரும் அங்கே இருக்கிறார்கள். அவர்களுடைய சுதந்தர பூமியைவிட்டு அந்நிய தேசத்திற்கு வருகிறார்கள். மோவாப் ஒரு சபிக்கப்பட்ட தேசம். அம்மோனியரும் மோவாபியரும் சபிக்கப்பட்டவர்கள். அவர்கள் லோத்தின் பிள்ளைகள். அந்த இடத்திற்கு வரும்போது என்ன ஏற்பட்டது? மரணம் ஏற்பட்டது. அதைப்போலவே, ஒருவர் வார்த்தையைவிட்டுப் போகும்போது முதலாவது ஆவிக்குரிய மரணம் **(Spiritual Death)** ஏற்படுகிறது. ஆத்துமா மரித்துப்போகிறது. ஜீவபுஸ்தகத்திலிருந்து பேர் கிறுக்கப்படுகிறது. பின்பு சரீரப்பிரகாரமான மரணம் **(Physical Death)** வருகிறது. சபையைவிட்டுப் பின்வாங்கிப்போனவர்கள் சிலர் மரித்துப்போனார்கள். தங்களுடைய காலத்திற்கு முன்னே மரித்திருக்கிறார்கள். முதலாவது ஆத்துமா சாகும். பின்பு சரீரம் சாகும். அதன்பின்பு அக்கினிக்கடலில் **(Lake of Fire)** தள்ளப்படுவார்கள். இதுதான் பின்வாங்கிப்போகிற ஆத்துமாக்களின் **(Backsliding Souls)** முடிவு. பின்வாங்கிப்போகிறவர்களால் போதகருக்கு நஷ்டம் கிடையாது. சபைக்கும் நஷ்டம் கிடையாது. அவர்களுக்குத்தான் நஷ்டம். உலகம் வேண்டுமென்றால் போகலாம். ஆண்டவர் யாரையும் கட்டாயப்படுத்துவதில்லை. போகவேண்டுமானால் போகலாம். ஆனால் அதன் பலனை அனுபவிக்கவேண்டும். கண்டிப்பாக அனுபவிக்கவேண்டும்.

இவள் பெத்லெகேமை விட்டு சபிக்கப்பட்ட தேசமாகிய மோவாப் தேசத்திற்குப் போனாள். அங்கே மரணம்தான் வந்தது. இப்பொழுது அவளின் இரண்டு மகன்கள் இருக்கிறார்கள். இரண்டு பேருக்கும் மோவாப் தேசத்திலேயே விவாகம்பண்ணி வைத்தாள் **(**ரூத் 1:4**)**. விவாகம் பெத்லெகேமில் நடக்கவேண்டும். ஆனால் அது மோவாபிலே நடக்கிறது. அப்படி நடக்கலாமா? கர்த்தருடைய பிள்ளைகளுக்கு விவாகம் சபையிலே, தேவ சமுகத்தில் நடக்கவேண்டும். இதைவிட்டு மோவாபிலே போய் விவாகம்பண்ணினால்? அங்கே எவ்வளவு பெரிய தவறு நடந்திருக்கிறதென்று பாருங்கள். அவர்கள் ஸ்தாபன முறைப்படி, உலக முறைப்படி விவாகம் செய்துகொண்டார்கள். வார்த்தையில் விவாகம் செய்யவில்லை. இன்றைக்கு, இந்த நேரத்திற்குரிய செய்தியில் இருக்கிறவர்களையும் மாற்றவேண்டியிருக்கிறது. ஸ்தாபனத்தில் இருந்து வந்தாலும் மாற்றவேண்டியிருக்கிறது. இவர்கள் மோதிரம், தாலி

என்பார்கள். அதை மாற்றவேண்டும். அவர்களோடும் போராடவேண்டும். இவர்களையும் திருத்தவேண்டும். அவர்களையும் திருத்தவேண்டும். சில நேரத்தில் அவர்களைத் திருத்தினாலும் இவர்களோடு போராட முடியாது. “தீர்க்கதரிசி சொன்னார்”, “தீர்க்கதரிசி சொன்னார்” என்று சொல்லிக்கொண்டிருப்பார்கள். நாம் வைராக்கியமாக இருந்தால் ஜெயிக்கலாம். நமக்கு ஆவிக்குரிய வைராக்கியம் தேவை. பிசாசு எப்பொழுதும் நம்மை மேற்கொள்ளப் பார்ப்பான். கொஞ்சம் உலகத்தைக் கொண்டுவருவான். கொஞ்சம் புளித்தமாவைக் கொண்டுவருவான். அனுமதித்தால் எல்லாம் புளிப்பாகிவிடும். நான் மோதிரத்தைப் போட்டுக்கொண்டு பிரசங்கம்பண்ணினால் நீங்கள் அதைத்தான் பார்ப்பீர்கள். நமக்கு அது தேவையா? நமக்கு அது தேவையில்லை. சகோ. பிரன்ஹாம் கையில் மோதிரம் இல்லை.

மக்லோனும் கிலியோனும் உலகப் பிரகாரமாக விவாகம்பண்ணிக்கொண்டார்கள். கடைசியில் என்ன நடந்தது? இரண்டுபேரும் மரித்துப்போனார்கள். இப்பொழுது மருமக்கள்மாறும் விதவைகள். இவளும் விதவை. மூன்று விதவைகள் அங்கே இருக்கிறார்கள். நகோமி தனித்தவளானாள். தங்களுடைய சொந்த தேசத்திற்கு அப்பாலே அவளுடைய குடும்பத்தார் மரித்துப்போனார்கள் **(Naomi’s family had died outside of their homeland)**. அவளுக்கு நடந்தது அதுதான். முதலாவது ஆவிக்குரிய மரணம். ஆவிக்குரிய மரணம் நடந்தால் யாருக்கும் ஒன்றும் தெரியாது. ஏனென்றால் ஆத்துமா மரித்துப்போவது வெளியே தெரியாது. ஆனால் சரீரம் செத்தால் எல்லாருக்கும் தெரியும். அதற்குத்தான் கவலைப்படுவார்கள். ஆனால் ஆத்துமா மரித்துப்போனதே என்று நிறையபேர் கவலைப்படமாட்டார்கள். ஆத்துமா ஜீவனோடு இருந்து சரீரப்பிரகாரமான மரணம் வந்தாலும் அது தேவனுடைய ராஜ்யத்திற்குப் போகிறதென்று சந்தோஷப்படலாம். ஆத்துமா செத்துப்போனதென்றால் அது எவ்வளவு பெரிய காரியம்? இங்கே யாரும் அவ்விதமான நிலைமையில் இருக்கமாட்டீர்கள் என்று நினைக்கிறேன்.

சொந்த தேசத்திற்கு அப்பாலே தன் குடும்பத்தார் மரித்துப்போகும்போது, கர்த்தர் தம்முடைய ஜனங்களைச் சந்தித்து, அவர்களுக்கு ஆகாரம் அருளினார் **(The Lord has visited His people)** என்று நகோமி கேள்விப்பட்டாள்.

**ரூத் 1: 6**

6. கர்த்தர் தம்முடைய ஜனங்களைச் சந்தித்து, அவர்களுக்கு ஆகாரம் அருளினார் என்று அவள் மோவாப்தேசத்திலே கேள்விப்பட்டு, தன் மருமக்களோடே கூட மோவாப் தேசத்திலிருந்து திரும்பிவரும்படி எழுந்து,

கேள்விப்பட்ட உடனே அவள் புறப்பட்டு வருகிறாள். பெத்லெகேமுக்கு திரும்பிவருகிறாள். அடுத்த வசனத்தில் அவள் பெத்லெகேமுக்குத் திரும்பிவருகிறாள். அல்லேலூயா. இதுதான் இஸ்ரவேல் ஜனங்கள் ஒன்றுசேர்வது **(Gathering of Israel)**. மோவாபிலிருந்து பெத்லெகேமுக்கு வருவதுதான் இஸ்ரவேல் ஜனங்கள் தங்கள் சொந்த தேசத்தில் ஒன்றுசேர்வது. அதுதான் ஏழு எக்காளங்கள். எக்காளங்கள் என்ன செய்கிறது? இஸ்ரவேல் ஜனங்களைத் தங்கள் சொந்த தேசத்திற்குக் **(Promised Land)** கொண்டுசெல்லுகிறது. நம்மை வாக்களிக்கப்பட்ட வார்த்தையில் **(Promised Word)** கொண்டுவருகிறது. நாம் இன்றைக்கு எக்காளப் பண்டிகையில் இருக்கிறோம். இது ஆவிக்குரிய இடம் **(Spiritual Place)**. அது பூமிக்குரிய இடம் **(Natural Place)**. பழைய ஏற்பாடு பூமிக்குரியது. புதிய ஏற்பாடு ஆவிக்குரியது.

குடும்பத்தார் மரித்துப்போனார்கள். சூழ்நிலையானது அவளைத் தன்னுடைய சொந்த தேசத்திற்குப் போகும்படி தள்ளிற்று **(The circumstances begin to push her to the homeland)**. இவ்விதமான சூழ்நிலை அங்கே இருந்ததால்தான் அவள் பெத்லெகேமுக்கு வந்தாள். இவ்விதமான சூழ்நிலை வராமல் அங்கே அவள் உலகப்பிரகாரமாக நல்ல சந்தோஷமாய் இருந்திருந்தால் அவள் வரமாட்டாள். தங்கள் சொந்த தேசத்தில் கர்த்தர் மழையைக் கட்டளையிட்டு விளைச்சலைத் தந்தார், பஞ்சகாலம் முடிந்தது என்று அவள் கேள்விப்பட்டபோது அங்கே புறப்பட்டுப் போகிறாள். எப்பொழுது? 1948ம் வருடம். அல்லேலூயா. 1948ல் இருந்து 2016 வரை 68 வருடங்கள். 68 வருடங்களாக இப்பொழுது எக்காளப் பண்டிகை நடந்துகொண்டிருக்கிறது. இஸ்ரவேல் ஜனங்கள் உலகத்தின் 80 நாடுகளில் சிதறியிருந்தவர்கள் இப்பொழுது தங்கள் சொந்த தேசத்திற்குத் திரும்பிக்கொண்டிருக்கிறார்கள். ஏறக்குறைய எல்லாரும் இப்பொழுது திரும்பிவிட்டார்கள்.

“விசுவாசமானது ஆறாவது புலனாயிருக்கிறது” **(60-0611E - Faith Is The Sixth Sense)** என்ற செய்தியில் சகோ. பிரன்ஹாம் ஒரு

படக்காட்சியைக் குறித்துச் சொல்லுகிறார். "நடுராத்திரிக்கு இன்னும் மூன்று நிமிடங்கள் இருக்கிறது" **(Three Minutes To Midnight)** என்ற படக்காட்சியை எடுத்திருக்கிறார்கள். சகோ. பிரன்ஹாம் அதைப் பார்த்தார். அதில் இஸ்ரவேல் ஜனங்கள் எப்படி தங்கள் சொந்த தேசத்திற்குத் திரும்புகிறார்கள் என்பதைக் காண்பித்திருக்கிறார்கள். வயதானவர்கள் எல்லாம் ஈரான் **(Iran)** நாட்டிலிருந்தும் இன்னும் பல நாடுகளிலிருந்தும் விமானத்தில் வரும்போது அவர்களைப் பார்த்து "நீங்கள் எதற்காக உங்கள் சொந்த தேசத்திற்கு வருகிறீர்கள்? மரிப்பதற்காகவா? என்று கேட்கும்பொழுது அவர்கள் "இல்லை, நாங்கள் மேசியாவைக் காண வந்திருக்கிறோம் **(We have come to see the Messiah)**" என்று கூறினார்களாம். அல்லேலூயா.

இஸ்ரவேல் நாட்டின் கொடி ஆறு முனைகளைக் கொண்ட நட்சத்திரம் **(Six pointed Star)**. நம்முடைய நாட்டின் கொடி அசோக சக்கரம். இப்பொழுது அந்த ஆறு முனைகளைக் கொண்ட நட்சத்திரம் என்ற கொடி அங்கே பறந்துகொண்டிருக்கிறது. 1948ம் வருடத்திலிருந்து பறந்துகொண்டிருக்கிறது. தாவீதின் காலத்திலே இருந்த கொடி சுமார் 2500 வருடங்களுக்குப் பிறகு மறுபடியும் அங்கே பறக்கிறது. அல்லேலூயா. யார் செய்த காரியம். கர்த்தர் செய்த காரியம். ஆமென். இயேசுகிறிஸ்து ஏற்கனவே தீர்க்கதரிசனமாய் **(Prophecy)** சொல்லியிருக்கிறார்.

**மத்தேயு 24: 32-34**

32. அத்திமரத்தினால் ஒரு உவமையைக் கற்றுக்கொள்ளுங்கள்; அதிலே இளங்கிளை தோன்றி, துளிர்விடும்போது, வசந்தகாலம் சமீபமாயிற்று என்று அறிவீர்கள்.

33. அப்படியே இவைகளையெல்லாம் நீங்கள் காணும்போது, அவர் சமீபமாய் வாசலருகே வந்திருக்கிறார் என்று அறியுங்கள்.

34. இவைகளெல்லாம் சம்பவிக்கு முன்னே இந்தச் சந்ததி ஒழிந்துபோகாதென்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

வசந்தகாலம் என்றால் அது கர்த்தருடைய வருகையைக் **(It is the Coming of the Lord)** குறிக்கிறது. அத்திமரம் என்றால் இஸ்ரவேல் ஜனங்கள். பட்டுப்போன மரம் இப்பொழுது இளங்கிளை தோன்றி துளிர்விடுகிறது. அல்லேலூயா. இது இரண்டாம் வருகையின் நேரம். இப்பொழுது இயேசுகிறிஸ்து வாசலருகே வந்திருக்கிறார். மிகவும் சமீபமாக வந்திருக்கிறார். இவைகளெல்லாம் சம்பவிக்கு முன்னே இந்த சந்ததி ஒழிந்துபோகாது என்று சொல்லியிருக்கிறார். இந்த சந்ததி என்றால்

நீங்களும் நானும். அல்லேலூயா. அது கடைசிகால மணவாட்டியைக் குறிக்கிறது **(The End time Bride)**. இந்த கடைசி சந்ததி ஒழிந்துபோகாது என்று சொல்லும்பொழுது, நாம்தான் அந்த கடைசி சந்ததியாயிருக்கிறோம் **(We are the last generation)**. இன்னொரு சந்ததி வரப்போகிறதில்லை. நாம் மேலே எடுத்துக்கொள்ளப்படுவோம். இந்த சந்ததி ஒழிந்துபோவதில்லை. அல்லேலூயா. வார்த்தை எவ்வளவு தெளிவாயிருக்கிறது! இயேசுகிறிஸ்து எவ்வளவு தெளிவாக தீர்க்கதரிசனம் உரைத்திருக்கிறார். அது இந்த நேரத்திலே நிறைவேறிக்கொண்டிருக்கிறது. 68 வருடங்களாக அது நிறைவேறிக்கொண்டிருக்கிறது. அல்லேலூயா.

இப்பொழுது நாம் எங்கே இருக்கிறோம்? எக்காளப் பண்டிகைக்கும் பாவநிவிர்த்தி பண்டிகைக்கும் மத்தியில் நாம் இருக்கிறோம். அதை லேவியராகமம் 23ம் அதிகாரத்தில் எழுதவில்லை. ஆனால் அது வேதத்தில் உவமையாக **(parable)** எழுதியிருக்கிறது. இயேசுகிறிஸ்து தீர்க்கதரிசனமாய் சொல்லியிருக்கிறார். வெளிப்படுத்தின விசேஷத்திலே அது அடையாளங்களாக **(symbol)** இருக்கிறது. அது இன்றைக்கு உண்மையாக நிறைவேறிக்கொண்டிருக்கிறது. நீங்கள் அதில் ஒரு பாகமாக இருக்கிறீர்கள். நீங்கள் அந்தக் காலத்தில் வாழ்ந்துகொண்டிருக்கிறீர்கள். ஆமென்.

நகோமியின் கணவரும், இரண்டு மகன்களும் மரித்தார்கள். அதன்பின்பு நகோமி சொந்த தேசத்திற்குப் போகிறாள். அப்பொழுது அறுவடை நேரமாயிருந்தது. **(After the death of her family, Naomi was going back to the homeland in the beginning of harvest time)**. அங்கே அறுவடை முடியும்பொழுது, வாற்கோதுமை **(barley)** மற்றும் கோதுமை **(wheat)** அறுவடை முடியும்பொழுது நகோமி மீட்கப்படுகிறாள். முதலாவது ரூத் மீட்கப்படுகிறாள். இரண்டாவது நகோமி மீட்கப்படுகிறாள். நகோமி இழந்துபோன எல்லா சுதந்தரத்தையும் **(property)** போவாஸ் மீட்டுக்கொள்கிறான். அல்லேலூயா. பின்பு சந்தோஷமாய் வாழுகிறார்கள். அதுதான் அந்த கதை **(story)**. அதைப்போல நம்முடைய வாழ்க்கையும் சந்தோஷமாய் முடியப்போகிறது. அல்லேலூயா. நாம் சந்தோஷமாய் வாழப்போகிறோம். பரதீசில் வாழப்போகிறோம். நம்முடைய ஆண்டவர் இயேசுகிறிஸ்து அதை நமக்குத் திரும்பத் தரப்போகிறார் **(Paradise Regained)**. அவர் நம்முடைய இனத்தான் மீட்பர் **(Kinsman Redeemer)**. அல்லேலூயா. எத்தனைப்பேர் இயேசுவை நேசிக்கிறோம்? நாம் இயேசுவை நேசிக்கவேண்டும். செய்தியில் இருக்கிறவர்கள் எல்லாம் “தீர்க்கதரிசி”

“தீர்க்கதரிசி”, “மணவாட்டி” “மணவாட்டி” என்று சொல்லிக்கொண்டு ஆகாயத்தில் சிலம்பம் அடிக்கிறார்கள். ஆனால் கர்த்தர் நமக்குத் தெளிவான புரிந்துகொள்ளுதலைத் **(clear understanding)** தந்திருக்கிறார். அல்லேலூயா.

## ரூத் 1: 22

22. இப்படி நகோமி மோவாபிய ஸ்திரீயான தன் மருமகள் ரூத்தோடுங்கூட மோவாப் தேசத்திலிருந்து திரும்பிவந்தாள்; வாற்கோதுமை அறுப்பின் துவக்கத்தில் அவர்கள் பெத்லெகேமுக்கு வந்தார்கள்.

வாற்கோதுமை அறுப்பின் துவக்கத்தில் அவர்கள் பெத்லெகேமுக்கு வந்தார்கள் **(They came to Bethlehem in the beginning of barley harvest)**. அறுவடை முடியும்பொழுது போவாஸ் இரண்டு பேரையும் மீட்டுக்கொள்கிறான். நாம் இப்பொழுது அறுவடை நேரத்தில் வந்திருக்கிறோம். எல்லா அறுவடையும் இந்த அறுவடையில் வந்து முடிவடைகிறது. இதுதான் எல்லா அறுவடையையும்விட பெரிய அறுவடையாய் **(Greatest Harvest)** இருக்கிறது. இந்த அறுவடை நேரத்தில்தான் மீட்பு **(Redemption)** நடக்கிறது. இப்பொழுது நகோமி தன்னுடைய சொந்த தேசத்திற்கு வந்துவிட்டாள். அவள் இப்பொழுது மோவாபிலே இல்லை. நன்றாக கவனியுங்கள். ஒரு வார்த்தை விடாமல் நீங்கள் கவனித்தால்தான் உங்களுக்குச் செய்தி முழுமையாகப் புரியும். இப்பொழுது நகோமி மோவாபிலே இல்லை. நகோமி பெத்லெகேமில் இருக்கிறாள். இப்பொழுது இஸ்ரவேல் ஜனங்கள் இந்தியாவிலேயோ, ஈரான், ஈராக், ரஷ்யா போன்ற இடங்களிலேயோ இல்லை. நம்முடைய நாட்டில் மிசோரம் மற்றும் கேரளா போன்ற மாநிலங்களில் நிறையபேர் இருந்தார்கள். இப்பொழுது அவர்கள் அங்கே இல்லை. அந்த இடத்தையெல்லாம் விட்டுவிட்டு அந்த ஜெப ஆலயங்களை **(synagogues)** எல்லாம் விட்டுவிட்டுத் தங்கள் சொந்த நாட்டிற்குச் சென்றுவிட்டார்கள். அல்லேலூயா.

நகோமி இப்பொழுது பெத்லெகேமில் இருக்கிறாள். இரண்டாம் அதிகாரத்தில் பெத்லெகேமில் இருக்கிறாள். முதலாம் அதிகாரத்தில் மோவாபிலே இருந்தாள். அங்கே எவ்விதமான சூழ்நிலைகளைச் சந்தித்தாள் என்று அறிந்திருக்கிறோம். இப்பொழுது அவளோடு சேர்ந்து ரூத்தும் அங்கே இருக்கிறாள். ஆனால் போவாசுக்கும் நகோமிக்கும் எந்த விதமான தொடர்பும் இல்லை **(Boaz had no dealing with Naomi)**. நகோமி ஒரு

வீட்டில் வாடகைக்கு இருக்கிறாள். அங்கே இருக்கிற நகோமியை போவாஸ் சந்திக்கவில்லை. ஆனால் போவாசுக்கும் ரூத்துக்கும் ஐக்கியம் **(relationship)** இருந்தது. அவர்களுக்குப் பேச்சுத் தொடர்பு **(communication)** இருந்தது. அல்லேலூயா. அதுதான் இப்பொழுது நடக்கிறது. இஸ்ரவேல் ஜனங்கள் அங்கே இருக்கிறார்கள். 68 வருடங்களாக இருக்கிறார்கள். ஏழு எக்காளங்கள் அவர்களை அங்கே கொண்டு சென்றிருக்கிறது. நம்மை ஏழு எக்காளங்கள் இந்த நேரத்திற்கென்று வாக்களிக்கப்பட்ட வார்த்தையில் **(Promised Word)** கொண்டுவந்திருக்கிறது. ஆண்டவர் நம்மோடு ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார். ஆனால் அங்கே இருக்கிற அவர்களோடு ஆண்டவர் இன்னும் ஈடுபடவில்லை. எவ்வளவு சரியாக இருக்கிறதென்று பாருங்கள்.

இரண்டாம் அதிகாரத்திலும் மூன்றாம் அதிகாரத்திலும் நாம் ரூத் போவாசை வாசிக்கும்போது நகோமி அங்கே காட்சியில் இல்லை. அவளோடு எந்த பேச்சுத் தொடர்பும் இல்லை. அதேபோல 68 வருடங்களாக இஸ்ரவேல் ஜனங்கள் அங்கே இருந்தாலும் இன்னும் இயேசுகிறிஸ்து அவர்களோடு ஈடுபடவில்லை. ஆண்டவர் நம்முடன் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார். எத்தனைப் பேர் விசுவாசிக்கிறோம்?

போவாசுக்கு இன்னும் விவாகம் ஆகவில்லை. ஒரு குணசாலியான பெண்ணைத் **(character bride)** தேடிக்கொண்டிருக்கிறான். ரூத்திடம் அந்த குணத்தைப் பார்க்கிறான். அவர்கள் ஒருவரை ஒருவர் நேசிக்கிறார்கள் **(Boaz and Ruth fell in love)**. இன்னும் விவாக ஐக்கியம் **(marriage relationship)** ஏற்படவில்லை. ஆனால் பேச்சுத் தொடர்பு நடந்துகொண்டிருக்கிறது. அல்லேலூயா.

நகோமி இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் யூதர்களுக்கு அடையாளமாய் இருக்கிறாள் **(Naomi represents 144000 Israelites)**. இப்பொழுது அவர்கள் பாலஸ்தீனாவிலே வந்திருக்கிறார்கள். அவர்கள் தங்கள் மீட்பிற்காகக் காத்துக்கொண்டிருக்கிறார்கள் **(They are gathered in Palestine waiting for their redemption)**. 144000 பேர் இருக்கிறார்களா? இருக்கிறார்கள். அவர்கள் இஸ்ரவேல் நாட்டிலே காத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் அவர்கள் யார் என்று தெரியாது. அவர்கள் பரிசுத்தஆவியினால் முத்திரைப் போடப்படுவார்கள். அவர்கள்

பாவநிவிர்த்தி பண்டிகையிலே பலியை அடையாளம் கண்டுகொள்வார்கள். ஆமென்.

ரூத் 1: 5ல் என்ன வாசிக்கிறோம் என்றால், நகோமி எல்லாவற்றையும் இழந்துபோகிறாள். கணவன் மரித்துப்போனான். இரண்டு பிள்ளைகளும் விவாகம் செய்து குழந்தை இல்லாமலேயே வாலிப வயதில் மரித்துப்போனார்கள். விவாகமாகி கொஞ்ச வருடங்களுக்குள்ளாக மரித்துப்போயிருக்கிறார்கள். காலத்துக்கு முன்னே மரித்துப்போனார்கள். மக்லோன், கிலியோன் - பயம் **(Fear)**, வியாதி **(Sickness)**. பயம்மும் வியாதியும் அவர்களை மேற்கொண்டதால் மரித்துப்போனார்கள். 144000 பேர் இன்றைக்கு அங்கே இருக்கிறார்கள். ஐந்தாம் முத்திரையில் நாம் பார்க்கும்பொழுது சுமார் அறுபது லட்சம் யூதர்கள் மரித்துப்போனார்கள். ஹிட்லர் **(Hitler)**, முசோலினி **(Mussolini)**, எய்க்மேன் **(Eichmann)**, ஸ்டாலின் **(Stalin)** என்ற நான்கு கொடுங்கோல் மன்னர்கள் யூதர்களைக் கொன்றார்கள். அவர்கள் தேவனுடைய ஜனங்கள் என்ற ஒரே காரணத்தினாலே அவர்களைக் கொன்றார்கள். அவர்கள்தான் ஐந்தாம் முத்திரை இஸ்ரவேலர்கள். அவர்கள்தான் பலிபீடத்தின் கீழ் உள்ள ஆத்துமாக்கள்.

அவர்கள் எங்கே மரித்தார்கள்? எருசலேமில் அல்ல. தங்களுடைய சொந்த தேசத்திற்கு அப்பாலே மரித்தார்கள். **(Fifth seal Israelites are the souls under the altar. They died outside of their homeland)**. ஹிட்லர் ஜெர்மெனியில் **(Germany)** விஷவாயு செலுத்தி சுமார் அறுபது லட்சம் **(6 million)** யூதர்களைக் கொன்றான். ஸ்டாலின் ரஷ்யாவிலே **(Russia)** யூதர்களைக் படுகொலை செய்தான். முசோலினி இத்தாலியாவில் **(Italy)** கொலை செய்தான். கம்போடியா **(Cambodia)**, சீனா **(China)** போன்ற கம்யூனிஸ்ட் நாடுகளிலே **(Communist Countries)** அவர்கள் எல்லாம் படுகொலை செய்யப்பட்டார்கள். யூதர்கள் கொன்று குவிக்கப்பட்டார்கள். அவர்கள்தான் பலிபீடத்தின் கீழ் உள்ள ஆத்துமாக்கள். எப்படி எலிமெலேக்கு, மக்லோன், கிலியோன் பெத்லெகேமுக்கு அப்பாலே மரித்தார்களோ அதைப்போலவே இவர்கள் தங்கள் சொந்த தேசத்தைவிட்டு சிதறடிக்கப்பட்டு அங்கே இருக்கும்பொழுது மரித்தார்கள். அந்த மரித்துப்போன மூன்றுபேரும் ஐந்தாம் முத்திரையின் கீழ் இருக்கிறவர்களுக்கு அடையாளமாய் இருக்கிறார்கள். வெளிப்படுத்தல் 6:9-11 வரை ஐந்தாம் முத்திரையைக் குறித்து வாசிக்கிறோம்.

## வெளி 6: 9-11

9. அவர் ஐந்தாம் முத்திரையை உடைத்தபோது, தேவவசனத்தினிமித்தமும் தாங்கள் கொடுத்த சாட்சியினிமித்தமும் கொல்லப்பட்டவர்களுடைய ஆத்துமாக்களைப் பலிபீடத்தின்கீழே கண்டேன்.

10. அவர்கள்: பரிசுத்தமும் சத்தியமுமுள்ள ஆண்டவரே, தேவரீர் பூமியின்மேல் குடியிருக்கிறவர்களிடத்தில் எங்கள் இரத்தத்தைக்குறித்து எதுவரைக்கும் நியாயத்தீர்ப்புச்செய்யாமலும் பழிவாங்காமலும் இருப்பீர் என்று மகா சத்தமிட்டுக் கூப்பிட்டார்கள்.

11. அப்பொழுது அவர்கள் ஒவ்வொருவருக்கும் வெள்ளை அங்கிகள் கொடுக்கப்பட்டது; அன்றியும், அவர்கள் தங்களைப்போலக் கொலைசெய்யப்படப்போகிறவர்களாகிய தங்கள் உடன்பணிவிடைக்காரரும் தங்கள் சகோதரருமானவர்களின் தொகை நிறைவாகுமளவும் இன்னுங்கொஞ்சக்காலம் இளைப்பாறவேண்டும் என்று அவர்களுக்குச் சொல்லப்பட்டது.

அவர்கள் தாங்கள் கொடுத்த சாட்சியினிமித்தம் **(இயேசுகிறிஸ்துவைப் பற்றிய சாட்சி அல்ல)** கொல்லப்பட்டார்கள். இதோ அவர்கள் பழிவாங்கும்படிக் கேட்கிறார்கள். நியாயத்தீர்ப்புக்காகக் கேட்கிறார்கள். அப்பொழுது அவர்கள் ஒவ்வொருவருக்கும் வெள்ளை அங்கிகள் கொடுக்கப்பட்டது. வெள்ளை அங்கி நித்தியஜீவனைக் **(Eternal Life)** குறிக்கிறது. உங்களுக்கு நித்தியஜீவன் உண்டு என்ற உத்தரவாதம் கொடுக்கப்பட்டது. "உங்களுக்கு உடனே மீட்பு கிடையாது. நீங்கள் உபத்திரவகாலம் முடியும்வரைக்கும், உங்களைப்போலக் கொலைசெய்யப்படப் போகிறவர்களாகிய உங்கள் சகோதரர்களின் தொகை நிறைவாகுமளவும், ஆயிரவருட ஆளுகை முடியும்வரைக்கும், கடைசி உயிர்த்தெழுதலில் நித்தியஜீவனைப் பெறும்வரைக்கும் காத்திருக்கவேண்டும்" என்று சொல்லப்பட்டது.

இப்பொழுது அறுவடை நேரமாய் **(Harvest Time)** இருக்கிறது. முதலாவது விதைப்பின் காலத்தில் வித்து கீழே மண்ணுக்குள்ளே சென்றது. அது கொஞ்சம் கொஞ்சமாய் வளர்ந்து, ஜீவனானது மேலே செல்கிறது **(Life is moving from seed to seed)**. கடைசியாக அந்த வித்தில் வந்து ஜீவனானது ஒன்றுசேரும்போது வைக்கோல் மற்ற எல்லாமே மரித்துப்போகும். நாம் இப்பொழுது வித்தின் காலத்தில் **(Seed Time)** இருக்கிறோம். வித்தானது இப்பொழுது மேலே வந்திருக்கிறது. ஜீவன் இன்றைக்கு மேலே வந்திருக்கிறது. வித்தின் காலம்தான் அறுவடையின்

காலம். அல்லேலூயா. லூத்தர் **(Luther)** காலமல்ல, வெஸ்லி **(Wesly)** காலமல்ல, பெந்தெகொஸ்தே **(Pentecost)** காலமல்ல, நாம் இப்பொழுது கடைசி காலத்தில் **(End Time)** வந்திருக்கிறோம். அல்லேலூயா.

இப்பொழுது நாம் வித்தாய் **(Seed)** இருக்கிறோம். களஞ்சியத்தில் சேர்க்கப்படவேண்டிய நேரத்தில் இருக்கிறோம். மறுபடியும் வித்து வந்திருக்கிறது. வித்திலிருந்த ஜீவன் இப்பொழுது வித்திற்கு வந்திருக்கிறது **(Life is formed into the grain again)**. பன்மடங்காக **(multiple form)** அது வந்திருக்கிறது. அல்லேலூயா. இப்பொழுது புதிய காலத்தில் **(New Age)** வந்திருக்கிறோம். அறுவடையின் நேரம் புதிய காலமாய் இருக்கிறது. நாம் இப்பொழுது ஏழு சபைக்காலங்களில் இல்லை. ஏழு சபைக்காலங்கள் நமக்கு முடிவடைந்துவிட்டது. உலகம் லவோதிக்கேயாவில் **(Laodicea)** இருக்கிறது. ஸ்தாபனங்கள் லவோதிக்கேயாவில் இருக்கிறது. நாம் லவோதிக்கேயாவை விட்டு வெளியே வந்து இன்றைக்கு வித்தின் காலத்தில் வந்திருக்கிறோம். “கடைசிகால வித்தின் அடையாளம்” **(62-0319 The End Time Sign Seed)** என்று தீர்க்கதரிசி செய்தி கொடுத்திருக்கிறார். நாம் கடைசிகால வித்தாக இருக்கிறோம். ஆமென்.

1946ம் வருஷம் மே மாதம் 7ம் தேதி கர்த்தருடைய தூதனானவர் சகோ. பிரன்ஹாமைச் சந்தித்தார். அப்பொழுது இஸ்ரவேல் நாடானது பிரகடணம்பண்ணப்பட்டது. 1948ல் அவர்கள் தங்கள் சொந்த நாட்டைப் பெற்றுக்கொண்டார்கள். கர்த்தருடைய தூதனானவர் சகோ. பிரன்ஹாமைச் சந்தித்து “உனக்கு சுகமாக்கும் வரம் **(Healing Gift)** கொடுக்கப்படுகிறது. உலகமெங்கும் நீ அதைக் கொண்டுசெல்வாய்” என்று சொன்னார். உலகமெங்கும் சுகமாக்கும் எழுப்புதல் **(Healing Revival)** நடந்தது. வார்த்தையானது போதிக்கப்பட்டது. இன்றைக்கு வித்துக்கள் ஒன்றுசேர்ந்திருக்கிறது. அல்லேலூயா. நீங்கள் பதர் அல்ல. நீங்கள் வித்தாய் இருக்கிறீர்கள் **(You are a seed)**. பதர் சுட்டெரிக்கப்படும். உலகத்தை நேசித்தால் சுட்டெரிக்கப்படுவீர்கள். ஆவியானவர் சொல்லுகிறதற்குக் கீழ்ப்படியாதவர்களுக்கு சுட்டெரிக்கப்படுவதுதான் முடிவு. ஆவியானவர் எப்படி பேசுகிறார். ஒரு போதகர் மூலமாய்ப் பேசுகிறார். வார்த்தையைப் பேசுகிறார். போதகர் ஒரு சாதாரணமான மனுஷன் என்று ஒரு சிலர் நினைக்கலாம். ஆவியானவர் பேசுகிறார். ஆவியானவர் பேசுகிறதற்கு இருதயத்தைக் கடினப்படுத்தினால் அழிவுதான் நிச்சயம்.

இப்பொழுது ஆண்டவர் ஒரு புறஜாதி மணவாட்டியோடு ஈடுப்பட்டுக்கொண்டிருக்கிறார் **(He is dealing with a Gentile Bride)**. போவாஸ் புறஜாதிப் பெண்ணாகிய ரூத்தோடு ஈடுப்பட்டுக்கொண்டிருந்தான். நகோமி சொந்த தேசத்தில் இருக்கிறாள். ஆனால் அவளோடு ஈடுபடவில்லை. இயேசுகிறிஸ்து நம்முடைய போவாசாய் இருக்கிறார் **(Our Boaz is Jesus Christ)**. நாம் ரூத்தாய் இருக்கிறோம். நம்மோடு இப்பொழுது ஈடுப்பட்டுக்கொண்டிருக்கிறார் **(Love affair)**. நாம் தேவனோடுகூட காணக்கூடாத ஐக்கியத்தில் **(Invisible Union)** இருக்கிறோம். கர்த்தர் நமக்குத் தம்மை வெளிப்படுத்திக்கொண்டிருக்கிறார். ஆனால் அவர்கள் அங்கேதான் இருக்கிறார்கள், ஆண்டவர் இன்னும் தம்மை அவர்களுக்கு வெளிப்படுத்தவில்லை. இன்றைக்கு நாம் அந்த நேரத்தில் இருக்கிறோம். எத்தனைப்பேர் அதை உணருகிறீர்கள்?

எந்த நேரத்தில் நாம் இருக்கிறோம்? உலக சரித்திரம் என்ன சொல்லுகிறது? கர்த்தருடைய வார்த்தை என்ன சொல்லுகிறது? நகோமி இப்பொழுது திரும்பி வந்திருக்கிறாள். ஆனால் இன்னும் மீட்பைப் பெறவில்லை. அதற்கு மத்தியிலே நாம் போவாஸ் ரூத்தைப் பற்றிய இரகசியத்தைப் பார்க்கிறோம். அது கிறிஸ்துவையும் அவருடைய மணவாட்டியையும் பற்றிய இரகசியமாய் இருக்கிறது. அது இப்பொழுது வெளிப்பட்டுக்கொண்டிருக்கிறது. அல்லேலூயா. **(Between Naomi's return and Naomi's redemption we see a mystery of Boaz and Ruth which is Christ and His Bride)**. இயேசுகிறிஸ்துவுடன் மணவாட்டியாகிய நாம் இன்றைக்கு ஐக்கியப்பட்டுக்கொண்டிருக்கிறோம். அவரை நேசிக்கிறோம். நாம் அவருடைய வார்த்தைக்கு அடிமையாக **(addict)** மாறிவிட்டோம். வேதத்தைத் தியானிப்பதற்கு நாம் அடிமையாக மாறிவிட்டோம். உலகம் இன்றைக்கு குடிக்கு அடிமையாய் இருக்கும்போது, பாவத்திற்கு அடிமையாய் இருக்கும்போது நாம் வார்த்தைக்கு அடிமையாக இருக்கிறோம். அன்பின் அடிமைகளாக **(Love slaves)** மாறிவிட்டோம். தேவன் நம்மோடு ஈடுபடுகிறார். அல்லேலூயா.

நாம் கிறிஸ்துவோடு காணக்கூடாத ஐக்கியத்தில் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறோம் **(Boaz and Ruth were coming together in invisible union)**. எக்காளப் பண்டிகைக்கும் பாவநிவிர்த்தி பண்டிகைக்கும் இடையில் நாம் இருக்கிறோம். இடையில் என்ன நடக்கிறது? இயேசுவும் அவருடைய மணவாட்டியும் ஐக்கியப்படுகிறார்கள் **(Jesus and His Bride are**

**dealing together)**. இதுதான் கடைசி சந்ததி. இந்த சந்ததி ஒழிந்துபோவதில்லை என்று இயேசுகிறிஸ்து சொன்ன அந்த சந்ததி நாம்தான் **(We are the last generation)**. அல்லேலூயா.

போவாஸ் ரூத்தை எங்கே சந்திக்கிறான்? வயல் வெளியில் சந்திக்கிறான். நகோமி வீட்டிற்குப்போய் சந்திக்கவில்லை. வயல் வெளியில் சந்திக்கிறான். நீங்கள் இப்பொழுது எங்கே வந்திருக்கிறீர்கள்? வயல் வெளியில் வந்திருக்கிறீர்கள். கதிரடிக்கும் களத்தில் **(threshing floor)** வந்திருக்கிறோம். அந்தக் களத்தில் என்ன நடக்கிறது? பதரும் கோதுமையும் பிரிக்கப்படுகிறது. இப்பொழுது களத்தில் நாம் கர்த்தருக்கு ஊழியம் செய்துகொண்டிருக்கிறோம். நிறைய பேர் இந்த ஊழியத்தில் பங்குபெறுகிறார்கள். எனக்கு மிகவும் உதவியாயிருக்கிறார்கள். கர்த்தருக்கென்று சேவை செய்கிறார்கள். ஆகையால் நீங்கள் இந்த ஊழியத்தில் ஒரு பாகமாய் இருக்கிறீர்கள். ஊழியத்தில் நமக்கு ஒரு பங்கு உண்டு. நாம் கர்த்தருக்கென்று எதையாகிலும் செய்யவேண்டும். போதகர் ஒருவரே எல்லாவற்றையும் செய்யமுடியாது. அநேக கரங்கள் நமக்குத் தேவை. நாம் அதில் ஒரு பங்காளியாக இருக்கும்போது பரலோகத்தில் நமக்கு பலன் உண்டு.

இப்பொழுது வயலில் **(field)** நாம் ஒரு ஊழியம் செய்துகொண்டிருக்கிறோம். “இயேசுவே உமக்கென்று நான் ஒரு ஊழியம் செய்யவேண்டும். என் ஆத்துமா தொய்ந்துபோகக்கூடாது. பல பிரச்சனைகளால் நான் சோர்ந்துபோகக்கூடாது. அதே சமயத்தில் ஊழியத்தைத் தளரவிடக்கூடாது. உமக்காக நான் இந்த மாம்சத்திலே என்ன செய்ய சித்தமாயிருக்கிறீரோ அதைச் செய்ய எனக்கு உதவிசெய்யும்”. இதுதான் ஒரு உண்மையான ஜெபம். அல்லேலூயா. பிசாசு இந்த நேரத்திலே பலவிதமான பிரச்சனைகளைக் கொண்டுவந்து நம்முடைய ஆத்துமாவை சோர்வடையப்பண்ணுவான். நாம் தளரக்கூடாது. ஊழியம் செய்வதற்கும் தடைகளைக் கொண்டுவருவான். எந்த விதத்திலும் நாம் சோர்ந்துபோகக்கூடாது. அல்லேலூயா. முன்பைவிட அதிகமாக ஊழியம் செய்யவேண்டும். வயலில் நாம் இருக்கிறோம். நாம் வீட்டில் தூங்கிக்கொண்டிருக்கவில்லை. நாம் வயலில் இருக்கிறோம். நீங்கள் இன்றைக்கு வயல் வெளியில் இருக்கிறீர்கள். நீங்கள் சேவை செய்வதற்காக வந்திருக்கிறீர்கள். இதோ போவாஸ் நம்மோடு ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார். அல்லேலூயா.

போவாஸ் என்ன சொல்லுகிறார்?

**ரூத் 2: 8**

8. அப்பொழுது போவாஸ் ரூத்தைப்பார்த்து: மகளே, கேள்; பொறுக்கிக்கொள்ள வேறே வயலில் போகாமலும், இவ்விடத்தைவிட்டுப் போகாமலும், இங்கே என் ஊழியக்காரப் பெண்களோடுகூடவே இரு.

“நீ வேறே வயலுக்குப் போகாதே. என்னுடைய பணிவிடைக்காரப் பெண்களோடுகூடவே இரு” என்று சொல்லுகிறார். வேறே வயல் என்பது வேறே சபையைக் குறிக்கிறது. இங்கே போதகர் பாவத்தைக் கண்டிக்கிறார், அரசியலில் ஈடுபடுவதைக் கண்டிக்கிறார் ஆகையால் நான் வேறே சபைக்குப் போகிறேன் என்று ஒரு விசுவாசி போகலாம். ஆனால் வேதம் என்ன சொல்லுகிறது? நீ வேறே வயலுக்குப் போகாதே. என்னுடைய விசுவாசிகளோடே நீ இரு. இந்த சபை அங்கத்தினரோடு இரு. வேறே சபைக்குப் போகாதே. இங்கேயே இருந்தால் உனக்குப் பலன் கிடைக்கும். நீ விவாக இணைப்பில் **(Marriage Union)** வரலாம். நீ எடுத்துக்கொள்ளப்படுதலில் **(Rapture)** வரலாம். அல்லது நீ போனால் உனக்கும் எனக்கும் சம்மந்தம் இல்லை, நான் உனக்கு ஒன்றும் செய்யமுடியாது. இதுதான் இன்றைக்கு இயேசுகிறிஸ்து சொல்லுகிறார்.

வேறு வயலுக்கு போகலாமா? சுயாதீன சித்தம் இருக்கிறது. எங்கே வேண்டுமானாலும் போகலாம். யார் வயலிலும் போய் சேவை செய்யலாம். அங்கே போய் ஆராதிக்கலாம். அங்கே போய் ஊழியம் செய்யலாம். ஆனால் விவாக இணைப்பு வராது. நீ சுதந்தரத்தைப் பெறமுடியாது. கடைசி வரைக்கும் உன் நிலைமை மாறாது. நீ போனால் அப்படித்தான் நடக்கும். ஆகையால் நீ போகாதே. உன்னுடைய நன்மைக்காகத்தான் சொல்லுகிறேன். இங்கேயே நிலைத்திரு. என்னுடைய பணிவிடைக்காரர்கள் இந்த வயலைவிட்டு அடுத்த நாள் வேறொரு இடத்தில் அறுவடை செய்வார்கள். என்னுடைய வயல் அங்கே இருக்கிறது. அவர்கள் பின்னாலே போ. இந்த சபை எப்படி வளருகிறதோ, இது எப்படிப் போகிறதோ அதைப்போலவே நீ போ. நீ வேறே பாதையில் போகாதே.

இங்கே புத்தியுள்ள கன்னிகைகள் **(Wise Virgins)** இருக்கிறார்கள். அந்த மாதிரியைப் பார்த்து அவர்களைப் பின்பற்று. நீ வேறே பாதையில் போனால் உனக்கு ஒன்றும் கிடைக்காது. அதுதான் நம்முடைய போவாஸ் இயேசுகிறிஸ்து சொல்லுகிறார். அல்லேலூயா. அன்றைக்கு ரூத்துக்குச்

சொன்னதுதான் இன்றைக்கு நமக்குச் சொல்லப்படுகிறது. இது பிரயாசபடவேண்டிய நேரம் **(Labouring Time)**. இப்பொழுது நாம் ஊழியம் செய்யவேண்டிய நேரம் **(Time of Service)**. நாம் யூதர் அல்லாத புறஜாதியாய் இருக்கிறோம். ஆபிரகாமின் காணியாட்சிக்குப் புறம்பானவர்கள். நாம் இப்பொழுது கர்த்தருடைய கணக்கில் வந்திருக்கிறோம் **(Gentiles coming into the economy of God now)**. கர்த்தர் இன்றைக்கு நம்மோடுகூட தொடர்புகொள்ளுகிறார். நாம் ஒரு உண்மையான அனுபவத்தைப் **(Real Experience)** பெற்றுக்கொண்டிருக்கிறோம். அல்லேலூயா.

போவாஸ் அங்கே வரும்போதெல்லாம் ரூத்தோடு பேசுகிறான். அவளுக்கு ஒரு அனுபவம் கிடைக்கிறது. அவளுக்கு அன்பும் தயவும் கிடைக்கிறது. அதேபோல சூழ்நிலையில்தான் நாம் இருக்கிறோம். நாம் சபைக்கு வரும்போதெல்லாம் இயேசுகிறிஸ்து நம்மோடுகூடப் பேசுகிறார். நமக்கு மறுபடியும் பிறந்த **(New Birth)** அனுபவம் கிடைத்திருக்கிறது. அல்லேலூயா. பரிசுத்தஆவியின் அபிஷேகம் **(Baptism of the Holy Ghost)** நமக்குக் கிடைத்து, நாம் தேவனோடுகூட காணக்கூடாத இணைப்பில் **(Invisible Union)** மகிழ்ந்துகொண்டிருக்கிறோம். அதே சமயத்திலே நாம் ஒரு சேவையும் செய்துகொண்டிருக்கிறோம். நாம் வயலில் இருக்கிறோம். எத்தனைப்பேர் அவ்விதமாய் இருக்கிறோம்? நீங்கள் ஆவிக்குரியவர்களாய் இருந்தால் நான் சொல்லுகிற காரியங்கள் உங்களுக்கு நூற்றுக்கு நூறு பொருந்தும்.

போவாஸ் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கு அடையாளமாய் இருக்கிறான். முதலாவது அவன் ரூத்துக்கு தான் அறுவடையின் எஜமான் **(Lord of the Harvest)** என்று வெளிப்படுத்துகிறான். அதன்பின்பு இனத்தான் மீட்பர் **(Kinsman Redeemer)** என்று வெளிப்படுத்துகிறான். இரண்டாம் அதிகாரத்திலே அறுவடையின் எஜமான். இயேசுகிறிஸ்து யார்? அறுவடையின் எஜமான். அவர் அறுவடையின் எஜமானாய் இருந்தால் நாம் வேலைக்காரர்கள். நாம் அறுவடை செய்யவேண்டும். ஆத்துமாக்களை ஆதாயம்பண்ணவேண்டும். நம்முடைய ஜீவியத்தினாலே ஆத்துமாக்களை ஆதாயம்பண்ணவேண்டும்.

நீங்கள் ஒவ்வொருவரும் உலகத்தில் வாழும்போது காலடிகளை விட்டுச் செல்கிறீர்கள். அது ஒரு எடுத்துக்காட்டாய் **(example)** இருக்கும்.

ஒருவேளை அது நல்ல எடுத்துக்காட்டாக **(good example)** இருக்கலாம். அல்லது கெட்ட எடுத்துக்காட்டாக **(bad example)** இருக்கலாம். சிலர் கெட்ட எடுத்துக்காட்டாக இருக்கிறார்கள். அவர்களைப்போல் நாம் இருக்கக்கூடாது. சிலர் நல்ல எடுத்துக்காட்டாக இருக்கிறார்கள். அல்லேலூயா. நாம் நல்ல எடுத்துக்காட்டாக வாழவேண்டும். நாம் சபைக்கு வருகிறோம் ஆனால் மனம்போல வாழலாம் என்றால் இயேசுகிறிஸ்துவிடம் அது செல்லுபடியாகாது. கணவன் மனைவிக்கு நல்ல கணவனாக இருக்கவேண்டும். மனைவி கணவனுக்கு நல்ல மனைவியாக இருக்கவேண்டும். பிள்ளைகள் தாய் தகப்பனுக்குக் கீழ்ப்படியவேண்டும். போதகருக்கு நல்ல விசுவாசிகளாக இருக்கவேண்டும். இயேசுகிறிஸ்துவை உண்மையாய் நேசிக்கிறவர்களாய் இருக்கவேண்டும். அப்படி ஒரு எடுத்துக்காட்டை நீங்கள் விட்டுச் செல்லும்போது உங்களைப் பார்த்து மற்றவர்கள் இரட்சிக்கப்படுவார்கள். உங்கள் காலடிகளைப் பின்பற்றி வருவார்கள். நாம் இன்றைக்கு நல்ல எடுத்துக்காட்டாக இருக்கிறோமா அல்லது கெட்ட எடுத்துக்காட்டாக இருக்கிறோமா?

நாம் வயலில் இருக்கிறோம். அவர் அறுவடையின் எஜமானாய் இருக்கிறார். நாம் அறுக்கிறவர்களாய் இருக்கிறோம். நாம் இன்றைக்குச் சேவை செய்யவேண்டும். ஆமென்.

**மத்தேயு 9: 36-38**

36. அவர் திரளான ஜனங்களைக் கண்டபொழுது, அவர்கள் மேய்ப்பனில்லாத ஆடுகளைப்போலத் தொய்ந்துபோனவர்களும் சிதறப்பட்டவர்களுமாய் இருந்தபடியால், அவர்கள்மேல் மனதுருகி,

37. தம்முடைய சீஷர்களை நோக்கி: அறுப்பு மிகுதி, வேலையாட்களோ கொஞ்சம்;

38. ஆதலால், அறுப்புக்கு எஜமான் தமது அறுப்புக்கு வேலையாட்களை அனுப்பும்படி அவரை வேண்டிக்கொள்ளுங்கள் என்றார்.

அறுப்பு மிகுதி. வேலையாட்களோ கொஞ்சம் **(Harvest is plenty but the labourers are few)**. உண்மையான வார்த்தையை சரியாகப் போதிக்கிறவர்கள் அதிகம் இல்லை. இப்பொழுது வேத வசனம் கேட்கக்கிடையாத பஞ்ச காலம் **(Famine of hearing the true Word of God)** இருக்கிறது. அபிஷேகம்பண்ணப்பட்டப் போதகர்களுக்குப் பஞ்சம் **(Famine of Real Anointed Preachers)**. அறுப்பு மிகுதியாய் இருக்கிறது. செய்தி நிறைய இடம் போய்விட்டது. நிறைய விசுவாசிகள் இருக்கிறார்கள். ஆனால்

அபிஷேகம்பண்ணப்பட்டப் போதகர்கள் மிக சொற்பமாக இருக்கிறார்கள். வேலையாட்கள் கொஞ்சம். ஆகையால் வேலையாட்களை அனுப்பும்படி நீங்கள் ஜெபம்பண்ணுங்கள் என்று அறுவடையின் எஜமான் சொல்லுகிறார். இயேசுகிறிஸ்துதான் அறுவடையின் எஜமான் **(Jesus Christ is the Lord of the Harvest)**. 2ம் அதிகாரத்திலே போவாஸ் தன்னை அறுவடையின் எஜமானாக ரூத்துக்கு வெளிப்படுத்துகிறான். அங்கே அறுக்கிறவர்கள்மேல் கண்காணியாக ஒருவர் இருக்கிறார் **(Chief Reaper)**. நமக்கும் ஒரு கண்காணி இருக்கிறார். அவர்தான் தீர்க்கதரிசி வில்லியம் பிரன்ஹாம் **(Prophet William Branham)**. அந்த கண்காணியிடத்தில்தான் போவாஸ் போய் கேட்கிறான். என்ன கேட்கிறான்? இந்தப் பெண் யார் என்று கேட்கிறான்.

**ரூத் 2: 5-7**

5. பின்பு போவாஸ் அறுக்கிறவர்கள்மேல் கண்காணியாக வைக்கப்பட்ட தன் வேலைக்காரனை நோக்கி: இந்தப் பெண்பிள்ளை யாருடையவள் என்று கேட்டான்.
6. அறுக்கிறவர்கள்மேல் கண்காணியாக வைக்கப்பட்ட அந்த வேலைக்காரன் பிரதியுத்தரமாக: இவள் மோவாப் தேசத்திலிருந்து நகோமியோடேகூடவந்த மோவாபிய பெண்பிள்ளை.
7. அறுக்கிறவர்கள் பிறகே அரிக்கட்டுகளிலிருந்து சிந்தினதைப் பொறுக்கிக்கொள்ளுகிறேன் என்று அவள் என்னிடத்தில் கேட்டுக்கொண்டாள்; காலமே துவக்கி இதுவரைக்கும் இங்கே இருக்கிறாள். இப்பொழுது அவள் குடிசைக்கு வந்து கொஞ்சநேரந்தான் ஆயிற்று என்றாள்.

தீர்க்கதரிசி **(Prophet)** தான் அந்த கண்காணி. நான் **(Pastor)** ஒரு பணிவிடைக்காரன். கதிர் பொறுக்குகிறது விசுவாசிகள் **(Believers)**. ஆண்டவர் அப்படி வைத்திருக்கிறார். கண்காணியாக இருக்கிறவன் அறுக்கமாட்டான். எல்லாவற்றையும் மேற்பார்வைப் பார்ப்பான். அறுக்கிறவர்களுக்கு எங்கே அறுக்கவேண்டும் என்று பாகம் பிரித்துக்கொடுத்து அவர்கள் எப்படி அறுக்கிறார்கள் என்று பார்ப்பான். பின்பு எல்லாவற்றையும் கட்டு கட்டாகக் கட்டி களத்துக்குக் கொண்டுவாருங்கள் என்று சொல்லுவான். நமக்கு கண்காணியாக ஏழாம் சபையின் தூதன் இருக்கிறார். அதற்குக் கீழே சில அபிஷேகம்பண்ணப்பட்டப் போதகர்கள் **(Anointed Preachers)** இருக்கிறார்கள். கதிர் பொறுக்குகிறவர்களாகிய விசுவாசிகளும் இருக்கிறார்கள். அல்லேலூயா. இவ்விதமான ஒரு ஒழுங்கை கர்த்தர் வைத்திருக்கிறார்.

போவாஸ் அந்த கண்காணியிடம் இந்தப் பெண் யார் என்று கேட்கும்போது "அவள் மோவாப் தேசத்திலிருந்து வந்திருக்கிறாள். கதிர்

பொறுக்கிக்கொள்ளும்படி என்னிடத்தில் அனுமதி கேட்டாள்" என்று அந்த கண்காணி கூறுகிறான். பாருங்கள் முறைப்படி அவள் வேலை செய்கிறாள். அவள் தன் இஷ்டமாக வந்து திருட்டளவாய் செய்யவில்லை. அனுமதி கேட்டுதான் செய்கிறாள். அவளிடம் அந்த ஒழுங்கான நடக்கை **(decent behaviour)** இருந்தது. அவள் குறுக்கு வழியிலே சென்று பிரச்சனையையும் குழப்பத்தையும் ஏற்படுத்துகிற பெண்ணல்ல. அவ்விதமான ஒரு பெண்ணை இயேசுகிறிஸ்து விவாகம்பண்ணமாட்டார். ஒழுங்காக வந்து அனுமதி கேட்டு செய்யும்போது அவளிடம் எவ்வளவு ஒழுங்கு கிரமம் இருக்கிறதென்று பாருங்கள். கிறிஸ்தவர்களிடம் ஒழுங்கு கிரமம் தேவை. மனம்போல போய் தன்னிச்சையாய் செயல்பட்டு கலகத்தையும் பிரச்சனைகளையும் ஏற்படுத்துவது கிறிஸ்தவர்களுக்கு அழகல்ல. ஒழுங்கான நடக்கை நமக்கு அவசியம்.

**ரூத் 2: 8, 12**

8. அப்பொழுது போவாஸ் ரூத்தைப்பார்த்து: மகளே, கேள்; பொறுக்கிக்கொள்ள வேறே வயலில் போகாமலும், இவ்விடத்தைவிட்டுப் போகாமலும், இங்கே என் ஊழியக்காரப் பெண்களோடுகூடவே இரு.

12. உன் செய்கைக்குத்தக்க பலனைக் கர்த்தர் உனக்குக் கட்டளையிடுவாராக. இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருடைய செட்டைகளின்கீழ் அடைக்கலமாய் வந்த உனக்கு அவராலே நிறைவான பலன்கிடைப்பதாக என்றான்.

அந்தக் கண்காணி இவ்விதமாய் சொன்னதைக் கேட்டவுடன் போவாசுக்கு அவள் மேல் பிரியம் உண்டாகிவிட்டது. அவன் அவளைப் பார்த்து "மகளே, நீ பொறுக்கிக்கொள்ள வேறே வயலுக்குப் போகாமல் இங்கேயே இரு" என்று சொல்லுகிறான். அதுமாத்திரமல்ல, "இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருடைய செட்டைகளின்கீழ் அடைக்கலமாய் வந்த உனக்கு அவராலே நிறைவான பலன் கிடைப்பதாக" என்று ஒரு தீர்க்கதரிசனமாகச் சொல்லுகிறான். ஒரு ஆசீர்வாதத்தை அவளுக்குச் சொல்லுகிறான். நீ மோவாப் தேசத்திலிருந்து இஸ்ரவேலின் தேவனிடத்தில் வந்திருக்கிறாய். நீ ஸ்தாபனத்திலிருந்து வந்திருக்கிறாய். இப்போது நீ ஸ்தாபனத்தைச் சேர்ந்தவளல்ல. நீ வார்த்தையில் இருக்கிற பெண்ணாக இருக்கிறாய். இஸ்ரவேலின் தேவனுடைய செட்டைகளின் கீழ் வந்திருக்கிறாய். உனக்கு பாதுகாப்பு உண்டு. உனக்கு ஆசீர்வாதம் உண்டு. உனக்கு நிறைவான பலன் கிடைக்கும். அல்லேலூயா. அதுமாத்திரமல்ல, அவன் தன் வேலைக்காரர்களைப் பார்த்து அவள் பொறுக்கிக்கொள்ள வேண்டுமென்றெ சிலதைச் சிந்தவிடுங்கள் என்று சொல்லுகிறான்.

**ரூத் 2: 16**

16. அவள் பொறுக்கிக்கொள்ளும்படிக்கு அவளுக்காக அரிகளிலே சிலதைச் சிந்தவிடுங்கள், அவளை அதட்டாதிருங்கள் என்று கட்டளையிட்டான்.

அதைப்போல கர்த்தர் நமக்கு விசேஷித்த வெளிப்பாடு தருகிறார். அல்லேலூயா. ஆண்டவர் நமக்கு தேவத்துவம் **(Godhead)**, இயேசுகிறிஸ்துவின் நாமத்திலே ஞானஸ்நானம் **(Baptism in the Name of Lord Jesus Christ)**, பரிசுத்த ஆவியின் அபிஷேகம் **(Baptism of the Holy Ghost)**, சர்ப்பத்தின் வித்து **(Serpent Seed)**, அவருடைய வருகை **(Coming of the Lord)** எவ்விதமாக இருக்கிறது போன்ற வெளிப்பாடுகளை எல்லாம் பரலோகத்தில் இருந்து நமக்குச் சிந்தவிடுகிறார். "நான் உங்களுக்கு வெளிப்பாடு தருகிறேன். நீங்கள் அதைப் புசியுங்கள், அதைச் சேகரித்துக்கொள்ளுங்கள்" என்று கர்த்தர் இந்த கடைசிகாலத்திலே நமக்கு நிறைய வெளிப்பாடு தந்திருக்கிறார். நாம் வயலில் இருக்கிறோம். அல்லேலூயா.

அறுக்கிறவர்கள் பணிவிடை ஆவிகளாக இருக்கிறார்கள் **(Ministering Spirits)**. அவர் தம்முடைய தூதர்களைக் காற்றுகளாகவும், தம்முடைய ஊழியக்காரரை அக்கினிஜுவாலைகளாகவும் செய்கிறார் **(**சங்கீதம் 104: 4**)**. இரட்சிப்பை சுதந்தரிக்கப்போகிறவர்களுக்கு அனுப்பப்படும் பணிவிடை ஆவிகளாய் இருக்கிறார்கள் **(**எபிரெயர் 1: 14**)**. அறுக்கிறவர்களைப் பார்த்து நீங்கள் கொஞ்சம் சிந்தவிடுங்கள். கொஞ்சம் வெளிப்பாடு **(Revelation)** கொடுங்கள். அப்படியே புஸ்தகத்தைப் படித்துக்கொண்டு சொல்லாதீர்கள். கொஞ்சம் வெளிப்பாடாய் செய்தியைக் கொடுங்கள். சற்று கவரும் விதமாகக் **(something interesting)** கொடுங்கள், சற்று புதிதாகக் **(something new)** கொடுங்கள். அவர்கள் அதைப் பெற்றுக்கொள்ளட்டும். அல்லேலூயா.

வெளிப்படுத்தல் 10ம் அதிகாரத்திலே, பலமுள்ள தூதன் இறங்கி வருகிறார். ஏழாம் தூதனை அவர் சந்திக்கிறார். யோவான் நமக்கு அடையாளமாய் இருக்கிறான். நாம் அந்த புஸ்தகத்தை வாங்கிப் புசிக்கிறோம். அல்லேலூயா. தேவனுடைய வார்த்தை நிறைவேறுகிறது. வெளிப்படுத்தல் 10ம் அதிகாரத்திலே மூன்று நபர்களைக் குறித்து வாசிக்கிறோம். ஒன்று பலமுள்ள தூதன் **(Mighty Angel)**. இரண்டாவது ஏழாம் தூதன் **(Seventh Angel)**. மூன்றாவது மணவாட்டியாகிய யோவான் **(John the Bride)**. போவாஸ் பலமுள்ள தூதன் இயேசுகிறிஸ்துவுக்கு அடையாளமாய் இருக்கிறான். அறுக்கிறவர்களின்மேல் கண்காணியாக இருப்பவன் ஏழாம் தூதனுக்கு அடையாளமாயிருக்கிறான். ரூத் மணவாட்டிக்கு அடையாளமாயிருக்கிறாள்.

வெளிப்படுத்தல் 10ம் அதிகாரம் முக்கியமானது. எல்லா அதிகாரங்களும் அதோடு இணைந்திருக்கிறது. ஒரு சக்கரத்தில் **(wheel)** முக்கிய மையம் **(hub)** இருக்கிறது. அங்கே இருந்துதான் அந்த குறுக்குக் கம்பிகள் **(spokes)** சக்கரத்தோடு இணைக்கப்படுகிறது. வெளிப்படுத்தலில் மொத்தம் 22 அதிகாரங்கள் இருக்கிறது. 10ம் அதிகாரம் அந்த முக்கிய மையமாக இருக்கிறது. மற்ற அதிகாரங்களெல்லாம் அதோடு இணைக்கப்பட்டிருக்கிறது. பிப்ரவரி 28, 1963ல் பலமுள்ள தூதன் மேகத்திலே வந்தார் **(The Mighty Angel descended from heaven)**. இன்றைக்கு அது நம்மையும் இணைக்கிறது. அல்லேலூயா.

## வெளி 10: 1

1. பின்பு, பலமுள்ள வேறொரு தூதன் வானத்திலிருந்து இறங்கிவரக்கண்டேன்; மேகம் அவனைச் சூழ்ந்திருந்தது, அவனுடைய சிரசின்மேல் வானவில்லிருந்தது, அவனுடைய முகம் சூரியனைப்போலவும், அவனுடைய கால்கள் அக்கினி ஸ்தம்பங்களைப்போலவும் இருந்தது.

ரூத் கதிர் பொறுக்கிக்கொள்ள அனுமதி கேட்டாள். அவளுக்குக் கிருபை கிடைத்தது. **(She began to find grace in that hour in the eyes of the great Lion of Judah)**. போவாஸ் யூதா கோத்திரத்தைச் சேர்ந்தவன். யூதா கோத்திரத்துச் சிங்கம் நம்முடைய ஆண்டவர் இயேசுகிறிஸ்து. அவர் சிங்கம். அவர் ராஜாவாய் இருக்கிறார். நமக்கு அவர் கண்களில் தயவு கிடைத்திருக்கிறது. அல்லேலூயா.

## ரூத் 2: 13

13. அதற்கு அவள்: என் ஆண்டவனே, உம்முடைய கண்களில் எனக்குத் தயைகிடைக்கவேண்டும்; நான் உம்முடைய வேலைக்காரிகளில் ஒருத்திக்கும் சமானமாயிராவிட்டாலும், நீர் எனக்கு ஆறுதல் சொல்லி உம்முடைய அடியாளோடே பட்சமாய்ப் பேசினீரே என்றாள்.

எத்தனைப்பேருக்கு தயவு கிடைத்திருக்கிறது? அவர் நம்மைத் தெரிந்துகொண்டிருக்கிறார். அல்லேலூயா. நாம் அவரைத் தெரிந்துகொள்ளவில்லை, அவர் நம்மைத் தெரிந்துகொண்டிருக்கிறார். நாம் இன்றைக்கு வயலில் இருக்கிறோம். யூதா கோத்திரத்துச் சிங்கம் அங்கே வருகிறார். நம்மைப் பார்க்கிறார். கண்காணி நம்மை **(End time Bride)** அவருக்கு அறிமுகப்படுத்துகிறார். நமக்கு இன்றைக்கு தயவு கிடைத்திருக்கிறது. எவ்வளவு பெரிய சிலாக்கியம்! இந்த சிலாக்கியத்தை நினைத்தால் நமக்கு உலகத்தின்மேல் ஆசை வருமா? உலக

உல்லாசத்தின்மேல் நமக்கு விருப்பம் வருமா? அதைவிட பெரிய சந்தோஷத்தை நமக்குத் தந்திருக்கிறார். உலகம் கொடுக்கமுடியாத சந்தோஷத்தைத் தந்திருக்கிறார். அல்லேலூயா.

## ரூத் 2: 10

10. அப்பொழுது அவள் தரையிலே முகங்குப்புற விழுந்து வணங்கி: நான் அந்நியதேசத்தாளாயிருக்க, நீர் என்னை விசாரிக்கும்படி எனக்கு எதினாலே உம்முடைய கண்களில் தயைகிடைத்தது என்றாள்.

“நீர் என்னை விசாரிக்கும்படி எனக்கு எதினாலே உம்முடைய கண்களில் தயைகிடைத்தது” என்று ரூத் அதைப் பெரிய சிலாக்கியமாக நினைக்கிறாள். தேவனுடைய காரியங்களை நினைக்கும்போது, கர்த்தர் அவருடைய திட்டத்தில் நம்மை ஒரு கதாபாத்திரமாக வைத்திருக்கிறார் என்றால் அது எவ்வளவு பெரிய சந்தோஷம்! அல்லேலூயா. இப்பொழுது அவள் கதிர் பொறுக்குகிறாள். அவளுக்கு நிந்தையும் போராட்டங்களும் இருக்கிறது. தன்னைத் தாழ்த்துகிறாள். நாம் இன்றைக்கு நம்மைத் தாழ்த்தி வார்த்தையின் நிமித்தம் வரும் நிந்தையைச் சுமந்துகொண்டு கர்த்தருக்கு ஒரு சேவை செய்துகொண்டிருக்கிறோம். 2ம் அதிகாரத்திலே நாம் அங்கே இருக்கிறோம்.

அதன்பின்பு மூன்றாம் அதிகாரத்திலே வாசிக்கும்பொழுது, மீட்பிம் திட்டம் திறக்கப்படுகிறது **(Opening the Plan of Redemption)**. நகோமி கற்பித்தபடி ரூத் அங்கே போய் போவாசின் கால் பக்கத்தில் படுத்துக்கொள்கிறாள். அது தாழ்மையைக் **(humility)** குறிக்கிறது. அவருடைய பாதபடியிலே நம்மைத் தாழ்த்தி ஒப்புக்கொடுக்கிறோம். அல்லேலூயா. அவர் பரிசுத்த ஆவி என்கிற போர்வையினாலே நம்மைப் போர்த்துகிறார் **(We are baptized by the Holy Spirit)**. நாம் இயேசுகிறிஸ்துவை தரித்துக்கொண்டிருக்கிறோம். ஆமென். அவர் நமக்கு மீட்பின் திட்டத்தை வெளிப்படுத்துகிறார். அது காணக்கூடாத இணைப்பாய் **(Invisible Union)** இருக்கிறது. களத்திலே நாம் வந்திருக்கிறோம். அந்த நேரத்திலே யாருமே இல்லை. ரூத்தும் போவாஸும் மட்டும்தான் இருக்கிறார்கள். அது தேவனோடு ஒரு தனிப்பட்ட அனுபவத்தைக் **(Personal Experience with God)** குறிக்கிறது. இப்பொழுது நாம் மொத்தமாக வந்து தேவனை ஆராதிக்கிறோம். வார்த்தையைக் கேட்கிறோம். ஜெபம்பண்ணுகிறோம். ஆனால் நீங்கள் வீட்டிற்குபோய் வார்த்தையைச்

சொல்லி மனதைத் திறந்து ஜெபிக்கும்போது அது தேவனோடு ஒரு தனிப்பட்ட அனுபவமாய் இருக்கிறது.

அந்த தனிப்பட்ட அனுபவம் வரும்போதுதான் போவாஸ் மீட்பின் திட்டத்தை வெளிப்படுத்துகிறான். உன்னை நான் எப்படி மீட்டுக்கொள்ளமுடியும் என்று சொல்லுகிறான். அவன் ஒரு இனத்தான் மீட்பர் என்று வெளிப்படுத்துகிறான். 2ம் அதிகாரத்திலே அறுவடையின் எஜமான் **(Lord of the Harvest)**. 3ம் அதிகாரத்திலே இனத்தான் மீட்பர் **(Kinsman Redeemer)**. 4ம் அதிகாரத்திலே அவளுக்கு கணவனாக **(Husband)** மாறுகிறான். மூன்று வகையான வெளிப்பாடுகள் **(Threefold Revelation)**. மீட்பின் மூன்று கட்டங்கள் **(Three stages of Redemption)**. நாம் அந்த மூன்று கட்டங்களில் வருகிறோம். இதோ வயல்வெளிக்கு வந்திருக்கிறோம். அவர் அறுவடையின் எஜமானாக இருக்கிறார். தனியாக ஐக்கியப்படும்போது இனத்தான் மீட்பர். உன்னை நான் எப்படி மீட்டுக்கொள்ளமுடியும் என்று வெளிப்படுத்துகிறார். இதோ வேதத்தில் வழிமுறை **(rule)** இருக்கிறது. எலிமெலேக்கு தன்னுடைய உடைமையை **(property)** விற்றுவிட்டு போய்விட்டான். அந்த உடைமையை மீட்கவேண்டும் என்றால் ஒரு இனத்தான் வந்துதான் மீட்கவேண்டும். லேவியராகமத்தில் அதை வாசிக்கிறோம்.

**லேவி. 25: 25**

25. உங்கள் சகோதரன் தரித்திரப்பட்டு, தன் காணியாட்சியிலே சிலதை விற்றால், அவன் இனத்தான் ஒருவன் வந்து, தன் சகோதரன் விற்றதை மீட்கக்கடவன்.

நான் உன்னுடைய இனத்தான் தான். ஆனால் என்னைவிட நெருங்கிய இனத்தான் ஒருவன் இருக்கிறான். நிலத்தை மீட்பது மட்டுமல்ல மரித்தவனுடைய மனைவியை விவாகஞ்செய்து முதலாவது பிறக்கிற பிள்ளைக்கு மரித்தவனுடைய பெயரைத் தரிக்கும்பொழுது இஸ்ரவேலில் அவன் பேர் அற்றுப்போகாதபடி பாதுகாக்கப்படுகிறது. அதைக்குறித்து உபாகமம் 25ம் அதிகாரத்திலே வாசிக்கிறோம்.

**உபாகமம் 25: 6**

6. மரித்த சகோதரனுடைய பேர் இஸ்ரவேலில் அற்றுப்போகாதபடிக்கு, அவன் பேரை அவள் பெறும் தலைப்பிள்ளைக்குத் தரிக்கவேண்டும்.

இனத்தான் வந்து நிலத்தை மீட்கவேண்டும். அதுமாத்திரமல்ல, சந்தானம் இல்லாமல் ஒருத்தியின் கணவன் மரித்துப்போனால் அவனுடைய சகோதரன் அவளை விவாகஞ்செய்து முதலாவது பிறக்கிற பிள்ளைக்கு அவனுடைய பெயரைத் தரிக்கும்பொழுது இஸ்ரவேலில் அவன் பெயர் விளங்குகிறது. அதையும் செய்யவேண்டும். இரண்டையும் போவாஸ் செய்கிறான். இன்றைக்கு இயேசுகிறிஸ்து இரண்டையும் நமக்குச் செய்கிறார். மணவாட்டியாகிய நம்மை விவாகம் செய்கிறார். இஸ்ரவேலை மீட்கிறார். அந்த நிலத்தை அவர் மீட்கிறார். அல்லேலூயா.

போவாஸ் இந்த மீட்பின் திட்டத்தை 3ம் அதிகாரத்திலே வெளிப்படுத்தி, 4ம் அதிகாரத்திலே செய்து முடிக்கிறான். எப்படி செய்துமுடிக்கமுடியும்? ஒலிமுக வாசலில் மூப்பர்கள் மத்தியில் சாட்சிகொடுக்கவேண்டும் **(Public Testimony)**. விவாகம் என்றால் ஒரு பொது அறிவிப்பு வேண்டும். சபை நடுவில் விவாகம் நடத்தவேண்டும். பதிவேட்டில் கையெழுத்துப்போட வேண்டும். சொந்தக்காரர்கள் வரவேண்டும். சும்மா வந்து விவாகம்பண்ணமுடியுமா? போவாஸ் மூப்பர்கள் மத்தியிலே அதைச் செய்கிறான். இன்றைக்கு மூப்பர்கள் மத்தியிலே இயேசுகிறிஸ்து வந்திருக்கிறார். அல்லேலூயா. அதை வெளிப்படுத்தல் 4ம் அதிகாரத்திலும் 5ம் அதிகாரத்திலும் வாசிக்கிறோம்.

**வெளி 4: 1-4**

1. இவைகளுக்குப்பின்பு, இதோ, பரலோகத்தில் திறக்கப்பட்டிருந்த ஒரு வாசலைக் கண்டேன். முன்னே எக்காளசத்தம்போல என்னுடனே பேச நான் கேட்டிருந்த சத்தமானது: இங்கே ஏறிவா, இவைகளுக்குப்பின்பு சம்பவிக்கவேண்டியவைகளை உனக்குக் காண்பிப்பேன் என்று விளம்பினது.
2. உடனே ஆவிக்குள்ளானேன்; அப்பொழுது, இதோ, வானத்தில் ஒரு சிங்காசனம் வைக்கப்பட்டிருந்தது, அந்தச் சிங்காசனத்தின்மேல் ஒருவர் வீற்றிருந்தார்.
3. வீற்றிருந்தவர், பார்வைக்கு வச்சிரக்கல்லுக்கும் பதுமராகத்துக்கும் ஒப்பாயிருந்தார்; அந்தச் சிங்காசனத்தைச்சுற்றி ஒரு வானவில்லிருந்தது; அது பார்வைக்கு மரகதம்போல் தோன்றிற்று.
4. அந்தச் சிங்காசனத்தைச் சூழ இருபத்துநான்கு சிங்காசனங்களிருந்தன; இருபத்துநான்கு மூப்பர்கள் வெண்வஸ்திரந்தரித்து, தங்கள் சிரசுகளில் பொன்முடி சூடி, அந்தச் சிங்காசனங்களின்மேல் உட்கார்ந்திருக்கக்கண்டேன்.

**வெளி 5: 5-7**

5. அப்பொழுது மூப்பர்களில் ஒருவன் என்னை நோக்கி: நீ அழவேண்டாம்; இதோ, யூதா கோத்திரத்துச் சிங்கமும் தாவீதின் வேருமானவர் புஸ்தகத்தைத் திறக்கவும் அதின் ஏழு முத்திரைகளையும் உடைக்கவும் ஜெயங்கொண்டிருக்கிறார் என்றான்.
6. அப்பொழுது, இதோ, அடிக்கப்பட்ட வண்ணமாயிருக்கிற ஒரு ஆட்டுக்குட்டி சிங்காசனத்திற்கும், நான்கு ஜீவன்களுக்கும், மூப்பர்களுக்கும் மத்தியிலே நிற்கக்கண்டேன்; அது ஏழு கொம்புகளையும் ஏழு கண்களையும் உடையதாயிருந்தது; அந்தக் கண்கள் பூமியெங்கும் அனுப்பப்படுகிற தேவனுடைய ஏழு ஆவிகளேயாம்.
7. அந்த ஆட்டுக்குட்டியானவர் வந்து, சிங்காசனத்தின்மேல் உட்கார்ந்தவருடைய வலதுகரத்திலிருந்த புஸ்தகத்தை வாங்கினார்.

இருபத்துநான்கு மூப்பர்கள் மத்தியில் அடிக்கப்பட்ட வண்ணமாயிருக்கிற ஆட்டுக்குட்டியாக இன்றைக்கு இயேசுகிறிஸ்து வந்திருக்கிறார். அல்லேலூயா. எதற்காக? புஸ்தகத்தைத் திறந்து நம்மை மீட்கவேண்டும் நகோமியை மீட்கவேண்டும். அல்லேலூயா. முதலாவது நம்மை மீட்கவேண்டும். பின்பு இலட்சத்து நாற்பத்து நாலாயிரம்பேரை மீட்கவேண்டும். மீட்பின் புஸ்தகம் திறக்கப்படுகிறது **(Opening the Book of Redemption)**. இரகசியம் வெளிப்படுகிறது **(Mystery Revealed)**. ரூத்துக்கு அந்த புஸ்தகம் திறக்கப்படுகிறது. நான் உன்னை மீட்கவேண்டுமென்றால் ஒலிமுகவாசலுக்குப் போகவேண்டும். சத்துருவோடு போராடவேண்டும் **(Confront with the enemy)**. நம்முடைய சத்துரு சாத்தான். இயேசுகிறிஸ்து சாத்தானோடு போராடவேண்டும். மங்கின நிற குதிரையோடு போராடவேண்டும். கழுகு மங்கின நிற குதிரையை ஜெயிக்கிறது. அல்லேலூயா.

எலிமெலேக்கு தன்னுடைய சுதந்தரத்தை இழந்துபோனான். அவன் பிள்ளைகளும் மரித்துப்போனார்கள். ஆனால் அவன் சுதந்தரம் அங்கே இருக்கிறது. அந்த சொத்து யாருக்குச் சொந்தம்? இதோ நகோமிக்குச் சொந்தம். ஆனால் அவளால் அதை மீட்கமுடியாது. இதோ போவாஸ் அதை மீட்கும்படியான தகுதியை உடையவனாய் இருக்கிறான். நகோமியின் மருமகளை அவன் விவாகம்பண்ணி எல்லாரும் அந்த சொத்தை அனுபவிக்கவேண்டும். அல்லேலூயா.

நம்முடைய எலிமெலேக்கு யார்? நம்முடைய போவாஸ் இயேசுகிறிஸ்து. எல்லாருக்கும் தெரிகிறது. நம்முடைய எலிமெலேக்கு யார்? நம்முடைய எலிமெலேக்கு ஆதாம் **(Adam)**. ஆதாம் சுதந்தரத்தை இழந்துபோனான். சத்துரு அதை எடுத்துக்கொண்டான். சாத்தான் **(squatter)** அதை கள்ளத்தனமாகப் பெற்றுக்கொண்டான். இந்த பூமி ஆதாமுக்குக் கொடுக்கப்பட்டது. ஆதாம் அதை இழந்துபோனான். எலிமெலேக்கு இழந்துபோனான். வாரிசுகளாகிய மக்லோனும் கிலியோனும் இழந்துபோனார்கள். இதோ நகோமியால் அதை மீட்கமுடியாது. பெத்லெகேமுக்கு வந்தாலும் அதை மீட்கமுடியவில்லை. போவாஸ்

வந்துதான் அதை மீட்கமுடியும். அல்லேலூயா. அவர் தான் ஐசுவரியவான். அவர் தான் நல்ல சுபாவம் உடையவர். இயேசுகிறிஸ்து திவ்ய சுபாவம் உடையவர். ஆயிரம் பதினாயிரம் பேர்களில் சிறந்தவர். அல்லேலூயா. அவர் தான் என் மீட்பர். அவர் என்னை மீட்டுக்கொண்டார். எனக்கு உண்டானது எல்லாவற்றையும் மீட்டுக்கொண்டார். இந்த உலகம் சாத்தானிடம் போய்விட்டது. அவன் அதின்மேல் ஆதிக்கம் செலுத்தினான். இயேசுகிறிஸ்து கல்வாரியில் **(Calvary)** கிரையத்தைச் செலுத்தினார். இப்பொழுது அதை உரிமைக் கோர **(To Claim)** வருகிறார். ஆயிர வருட ஆளுகை செய்ய வருகிறார். அவர் ராஜாவும், நியாயாதிபதியும் என்னுடைய மணவாளனுமாய் இருக்கிறார். அல்லேலூயா.

போவாஸ் அங்கே ஒலிமுகவாசலில் வரும்போது அவர் உரிமைக் கோர வருகிறார். மீட்க வருகிறார். இன்றைக்கு இயேசுகிறிஸ்து இறங்கி வந்திருக்கிறார். எப்படி இறங்கி வந்திருக்கிறார்? பலமுள்ள தூதனாக வந்திருக்கிறார். இரண்டாயிரம் வருஷத்துக்கு முன்பாக மாம்சத்தில் வாழ்ந்த இயேசுகிறிஸ்து இன்றைக்கு மேகத்திலே வந்திருக்கிறார். நாம் அதைக் காண்கிறோம். எதற்காக வந்திருக்கிறார்? நம்மைப் பெற்றுக்கொள்வதற்காக. நமக்கு அந்த மீட்பின் திட்டத்தை வெளிப்படுத்துவதற்காக. இந்த உலகம் நம்முடைய சொத்து. அது எலிமெலேக்கின் சுதந்தரம். இதை மனுஷன் வாழ்வதற்காகக் கொடுத்தார். ஆனால் சாத்தான் இதின் மேல் ஆதிக்கம் செலுத்துகிறான். துன்மார்க்கர் இதின் மேல் ஆதிக்கம் செலுத்துகிறார்கள். பாவிகள் உலகத்தில் ஜீவிக்கிறார்கள். பரிசுத்தவான்களுக்கு அது கொடுக்கப்படவேண்டும். அன்றைக்கு போவாஸ் வந்ததுபோல இன்றைக்கு இயேசுகிறிஸ்து வந்திருக்கிறார். அல்லேலூயா.

இப்படி எல்லாம் இயேசுகிறிஸ்து செய்யும்போது, “என்மேல் உனக்கு நேசம் இல்லையே, உனக்கு அந்த பாவத்தின்மேலதான் ஆசை இருக்கு” என்று சிலரைப் பார்த்து ஆண்டவர் கேட்கிறார். “உனக்கு இவ்வளவு வெளிப்பாடு, இவ்வளவு ஆசீர்வாதங்களை வைத்து உனக்காக இவ்வளவு காரியத்தைச் செய்கிறேனே, நீ அதை கவனிப்பதே இல்லையே, அதைக்குறித்து உனக்கு சிந்தனையே இல்லையே” என்று ஆண்டவர் நம்மைப் பார்த்துச் சொன்னால் நாம் என்ன செய்வோம்? சிலருடைய வாழ்க்கை அவ்விதமாக இருக்கிறது. நாம் “கர்த்தாவே நீர் எனக்காக எவ்வளவு காரியத்தைச் செய்திருக்கிறீர்! இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன்பாக உம்முடைய ஜீவனைக் கிரயமாகக் கொடுத்தீர். இப்பொழுது உரிமைக் கோர வந்திருக்கிறீர், என்னை ஆட்டுக்குட்டியானவரின் மனைவியாகக் கொண்டுசெல்வதற்காக வந்திருக்கிறீர்” என்று சொல்லுகிறோம். அல்லேலூயா. கடைசிகால மணவாட்டிக்கு சரியான புரிந்துகொள்ளுதல் **(clear understanding)** இருக்கிறது. நம்முடைய கர்த்தர்

யார் என்றும் அவர் நமக்காக என்ன செய்தார் என்றும் இப்பொழுது அவர் என்ன செய்துகொண்டிருக்கிறார் என்றும் அறிந்திருக்கிறோம். நமக்கும் அவர்க்கும் ஒரு தனிப்பட்ட ஐக்கியம் இருக்கிறது. அல்லேலூயா.

நீ இளைப்பாறிக்கொண்டிரு. நீ இனிமேல் கதிர் பொறுக்கவேண்டாம். அவன் சீக்கிரமாய் இந்த காரியத்தை முடிப்பான் என்று நகோமி சொல்லுகிறாள்.

## ரூத் 3: 18

18. அப்பொழுது அவள்: என் மகளே, இந்தக் காரியம் என்னமாய் முடியும் என்று நீ அறியுமட்டும் பொறுத்திரு; அந்த மனுஷன் இன்றைக்கு இந்தக் காரியத்தை முடிக்குமுன் இளைப்பாறமாட்டான் என்றாள்.

இன்றைக்கு ஆண்டவர் எப்பொழுது மணவாட்டியைப் பெற்றுக்கொள்ளலாம் என்று நினைத்துக்கொண்டிருக்கிறார். மணவாட்டி இன்றைக்கு இளைப்பாறிக் கொண்டிருக்கிறோம். நாம் வார்த்தையில் இளைப்பாறிக் கொண்டிருக்கிறோம். அல்லேலூயா. "இயேசுகிறிஸ்து எனக்காக யாவையும் செய்துமுடிப்பார். ஆண்டவரே நான் இந்த காரியத்தை ஜெபத்திலே வைத்துவிட்டேன். நீர் எனக்காக இதைச் செய்துமுடிப்பீர். இதில் என்ன சிக்கலும் பிரச்சனையும் இருந்தாலும் எத்தனைப்பேர் தடையாய் இருந்தாலும் நீர் அதைச் செய்துமுடிப்பீர். என் கர்த்தர் எனக்காக யாவையும் செய்துமுடிப்பார்" என்று பொறுமையாய் இருக்கிறோம்.

ரூத் இளைப்பாறிக்கொண்டிருக்கிறாள் **(Ruth is Resting)**. நாம் தேவனுடைய வார்த்தையின்மேல் அவர் வாக்குத்தத்தத்தின்மேல் இளைப்பாறிக் கொண்டிருக்கிறோம் **(We are resting on the Word of God)**. சிலர் ஐசுவரியத்தை நம்பியிருக்கிறார்கள். மனுஷனை நம்பியிருக்கிறார்கள். நாம் அப்படி அல்ல. கர்த்தருடைய வார்த்தையைச் சார்ந்திருக்கிறோம். கர்த்தர் அவருடைய வார்த்தையை எப்படியாயினும் நிறைவேற்றுவார். நான் ஒரு நாளில் மேலே போகப்போகிறேன். மறுபடியும் இந்த உலகத்திற்கு வந்து ஆளுகை செய்யப்போகிறேன். எப்படி அது நடக்கும்? இயேசுகிறிஸ்து எல்லாவற்றையும் செய்வார். அவர் நம்முடைய மணவாளன். அவர் அறுவடையின் எஜமான். அவர் நம்முடைய இனத்தான் மீட்பர். எல்லாவற்றையும் செய்ய அவரிடம் வல்லமை இருக்கிறது. அல்லேலூயா.

ஐந்தாவது எக்காளப் பண்டிகை. ஆறாவது பாவநிவிர்த்தி பண்டிகை. அதற்கு மத்தியில் அறுவடையின் எஜமான் நம்மோடுகூட ஈடுபடுகிறார். 3ம் அதிகாரத்தில் போவாசுடன் இணைக்கப்பட்டிருக்கிறோம் **(One with Boaz)**. 4ம் அதிகாரத்திலே மீட்பு வருகிறது **(Redemption is taking place)**. அல்லேலூயா. நம்முடைய ஆத்துமா மீட்கப்பட்டாயிற்று. நம்முடைய சரீரம் இன்னும் மீட்கப்படவில்லை. நாம் பாவம் நிறைந்த உலகத்தில்

இருக்கிறோம். நாம் மேலே போகவேண்டும். அது இன்னும் நடக்கவில்லை. 4ம் அதிகாரத்திலே அது நடக்கிறது.

ஏழாவது பண்டிகை கூடாரப்பண்டிகையாகும். சகோதரர்கள் யோசேப்பிடம் வந்துவிட்டார்கள். அதைப்போல இன்றைக்கு இஸ்ரவேல் ஜனங்கள் வந்திருக்கிறார்கள். நகோமியும் ரூத்தும் வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட தேசத்திற்கு வந்துவிட்டார்கள். யோசேப்பு ஆஸ்நாத்தை விவாகஞ்செய்து குழந்தைகளைப் பெற்று குடும்ப வாழ்க்கை நடத்திக்கொண்டிருக்கிறான். அதைப்போல ஆண்டவர் இன்றைக்கு மணவாட்டியோடு ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார். இதோ சகோதரர்களுக்கு இன்னும் வெளிப்படுத்தவில்லை. இன்னும் நகோமியுடன் ஈடுபடவில்லை.

நகோமியுடன் 4ம் அதிகாரத்திலே தான் ஈடுபடுகிறான். நகோமி அங்கே தனியாக வீட்டிலிருக்கிறாள். அவள் போவாஸ் வீட்டிற்கு வரவேண்டும். அவன் ரூத்துடன் மட்டும்தான் ஈடுபடுகிறான். நகோமி இன்னும் போவாசை ஒருமுறை கூட பார்க்கவில்லை, பேசவில்லை. ஆனால் ரூத் தினமும் பார்க்கிறாள். தினமும் பேசுகிறாள். அதுதான் இப்பொழுது நடந்துகொண்டிருக்கிறது. இப்பொழுது நாம் பார்த்து பேசிக்கொண்டிருக்கிறோம். அவர்கள் தங்கள் தேசத்தில்தான் இருக்கிறார்கள். அவர்கள் இன்னும் பேசவில்லை. ஆனால் அவர்களும் பேசுவார்கள். அவர்களோடும் ஆண்டவர் ஈடுபடுவார். அவர்களுக்கும் தன்னை வெளிப்படுத்துவார். அவர்களையும் மீட்பார். அல்லேலூயா.

இதோ நகோமி பின்பு அங்கே சென்றுவிட்டாள். யோசேப்பு தன் சகோதரர்களுக்கு தன்னை வெளிப்படுத்தவேண்டும் என்று ஆஸ்நாத்தை அரண்மனைக்கு அனுப்பிவிடுகிறான். நம்மை மேலே கொண்டுபோனபின்பு நகோமி உள்ளே வருவாள். உபத்திரவகாலத்திலே, ஆறாம் முத்திரையின் காலத்திலே இலட்சத்து நாற்பத்து நாலாயிரம்பேர் மீட்கப்படுவார்கள். அல்லேலூயா. பின்பு எல்லாரும் போவாஸ், எலிமெலேக்குடைய சதந்தரத்தை அனுபவிக்கிறார்கள். இயேசுகிறிஸ்து இந்த உலகத்தைச் சிருஷ்டித்தார். ஆதாமுக்கு அதைக் கொடுத்தார். ஆதாம் அதை இழந்துபோனான். இப்பொழுது அந்த சுதந்தரம் நமக்குக் கிடைக்கப்போகிறது. நாம் இந்த உலகத்தை ஆயிரம் வருஷம் ஆளுகை செய்வோம். இயேசுகிறிஸ்துவோடு ஆயிரம் வருஷம் ஆளுகை செய்வோம்.

அப்பொழுது பிசாசு ஆயிரம் வருஷம் கட்டிவைக்கப்படுவான். அவன் ஜனங்களை மோசம்போக்காதபடி ஆண்டவர் அவனை பாதாளத்தில் தள்ளியடைக்கிறார் (வெளி. 20: 1, 2). முதலாம் உயிர்த்தெழுதலுக்குப் பங்குள்ளவன் பாக்கியவானும் பரிசுத்தவானுமாயிருக்கிறான். இவர்கள் தேவனுக்கும் கிறிஸ்துவுக்கும் முன்பாக ஆசாரியராயிருந்து, அவரோடுகூட ஆயிரம் வருஷம் அரசாளுவார்கள் (வெளி. 20: 6). வெளிப்படுத்தல் 20: 1-6

வரை ஆயிரவருஷ அரசாட்சியைப்பற்றி எழுதியிருக்கிறது. அது நடக்கப்போகிறது. போவாஸ், ரூத், நகோமி எல்லாரும் பெத்லெகேமில் இருக்கிறார்கள். இயேசுகிறிஸ்து, புறஜாதி மணவாட்டியாகிய நாம், மற்றும் இலட்சத்து நாற்பத்துநாலாயிரம் யூதர்கள் எல்லாரும் இந்த உலகத்தை ஆளுகைசெய்வோம். எத்தனை வருஷம்? ஆயிரம் வருஷம். உலகம் ஏதேனாக இருக்கும் **(Paradise Regained)**. அல்லேலூயா. இந்த சபிக்கப்பட்ட உலகம் அல்ல. நாம் சபிக்கப்பட்ட உலகத்தில் இருக்கிறோம். மனுஷர்கள் நம்மை ஆளுகிறார்கள். இதோ நாம் ஆளப்போகிறோம். இயற்கையை ஆளுகை செய்வோம்.

**வெளி 8: 1**

1. அவர் ஏழாம் முத்திரையை உடைத்தபோது, பரலோகத்தில் ஏறக்குறைய அரைமணிநேரமளவும் அமைதல் உண்டாயிற்று.

இப்பொழுது நாம் அரைமணிநேர அமைதலில் இருக்கிறோம். 2ம் வசனத்திலே தேவனுக்கு முன்பாக ஏழு தூதர்கள் நிற்கிறார்கள். அவர்களுக்கு ஏழு எக்காளங்கள் கொடுக்கப்பட்டது.

**வெளி 8: 7**

7. முதலாம் தூதன் எக்காளம் ஊதினான்; அப்பொழுது இரத்தங்கலந்த கல்மழையும் அக்கினியும்உண்டாகி, பூமியிலே கொட்டப்பட்டது; அதினால் மரங்களில் மூன்றிலொருபங்கு வெந்துபோயிற்று, பசும்புல்லெல்லாம் எரிந்துபோயிற்று.

முதலாம் எக்காளத்தில் பூமி **(Earth)** பாதிக்கப்படுகிறது. மரங்களும் பசும்புல்லும் **(Trees & Grass)** பாதிக்கப்படுகிறது. இன்றைக்கு மரங்களையெல்லாம் வெட்டிப்போட்டார்கள். புல் முளைக்க இடமில்லை. மாடு மேய்வதற்கு இடம் கிடையாது. மனுஷனுக்கே இடமில்லை. எல்லாம் மாசுபட்டிருக்கிறது **(Polluted)**. மரம் செடி வளர்வதற்கு நல்ல சுற்றுச்சூழல் **(Environment)** இல்லை. நல்ல பருவநிலை **(Climate)** இல்லை. நல்ல மண் இல்லை. நல்ல தண்ணீர் இல்லை.

**வெளி 8: 8**

8. இரண்டாம் தூதன் எக்காளம் ஊதினான்; அப்பொழுது அக்கினியால் எரிகிற பெரிய மலைபோன்றதொன்று சமுத்திரத்திலே போடப்பட்டது; அதினால் சமுத்திரத்தில் மூன்றிலொருபங்கு இரத்தமாயிற்று.

9. சமுத்திரத்திலிருந்த ஜீவனுள்ள சிருஷ்டிகளில் மூன்றிலொருபங்கு செத்துப்போயிற்று; கப்பல்களில் மூன்றிலொருபங்கு சேதமாயிற்று.

இரண்டாம் எக்காளத்திலே பார்க்கும்போது, சமுத்திரம் **(Sea)** கெட்டுப்போய்விட்டது. இன்றைக்கு பெரிய பெரிய திமிங்கலங்கள் செத்து செத்து கரையில் ஒதுங்குகிறதாம். நீங்கள் செய்தித்தாளில் வாசித்திருப்பீர்கள். ஏன் அது? வேதத்தில் எழுதியிருக்கிறது. மூன்றில் ஒரு பங்கு செத்துப்போயிற்று. அணு உலைகளின் கழிவு, சாக்கடை மற்றும்

எல்லாக் கழிவும் கடலில் தான் போய்சேர்கிறது. மற்ற நாட்டவர்கள் தங்கள் நாட்டிலிருந்து கழிவைக் கொண்டுவந்து நம்முடைய நாட்டில் விடுவார்கள். இரக்சியமாய் அதைச் செய்வார்கள். சமுத்திரம் கெட்டுப்போய் இருக்கிறது. ஜீவனுள்ள சிருஷ்டிகள் மரித்துக்கொண்டிருக்கிறது. சதாம் உசேன் என்ன செய்தான்? அமெரிக்கா படையெடுத்து வரும்போது பெட்ரோலைக் கடலில் ஊற்றி தீக்கொளுத்திவிட்டான். கடல் மாசுபட்டுப்போனது. அவர்கள் சண்டைக்குவராதபடி புகைவந்துவிட்டது. சில எண்ணைக் கப்பல்கள் எத்தனையோ டன் **(ton)** கணக்கில் எண்ணையைக் கொண்டுவரும்போது அது உடைந்துபோய் கடலெல்லாம் எண்ணை சேர்ந்துவிடும். அது கடலில் வாழும் பறவைகளின் இறகுகளிலெல்லாம் படிந்து பறக்கமுடியாமல் சாகும். இரண்டாம் தூதன் எக்காளம் ஊதம்போது சமுத்திரம் மாசுபட்டுப்போனது.

## வெளி 8: 10, 11

10. மூன்றாம் தூதன் எக்காளம் ஊதினான்; அப்பொழுது ஒரு பெரிய நட்சத்திரம் தீவட்டியைப்போல எரிந்து, வானத்திலிருந்து விழுந்தது; அது ஆறுகளில் மூன்றிலொருபங்கின்மேலும், நீரூற்றுகளின்மேலும் விழுந்தது.

11. அந்த நட்சத்திரத்திற்கு எட்டியென்று பெயர்; அதினால் தண்ணீரில் மூன்றிலொருபங்கு எட்டியைப்போலக் கசப்பாயிற்று; இப்படிக் கசப்பான தண்ணீரினால் மனுஷரில் அநேகர் செத்தார்கள்.

மூன்றாம் தூதன் எக்காளம் ஊதும்போது ஆறுகள், நீரூற்றுகள் மாசுபட்டது. இன்றைக்கு சுத்தமான தண்ணீர் **(fresh water)** கிடைப்பதில்லை. அதனால் நாம் தண்ணீரை காசு கொடுத்து வாங்குகிறோம். சமையலுக்கும் **(cooking)**, உடைகளை வெளுக்கவும் **(washing)**, குளிக்கவும் **(bathing)** சுத்தமான தண்ணீர் தேவை. மரம், செடிகள் வளரவேண்டும் என்றால் சுத்தமான தண்ணீர் தேவை. சுத்தமான தண்ணீர் இல்லையென்றால் என்ன செய்வது? தண்ணீரின் மூலமாகத்தான் எல்லா வியாதிகளும் வருகிறது. மாநகராட்சியில் விடும் தண்ணீர் **(corporation water)** சாக்கடை கலந்து வருகிறது. அதை சுத்தம் செய்ய நாம் வடிகட்டிகளை **(water filter)** பயன்படுத்தவேண்டும். அதற்கு தீர்வு கிடைக்குமா? எந்த காலத்தில் கிடைக்கும் என்று தெரியாது. சுத்தமான தண்ணீர் இல்லை. நாம் தண்ணீரை காசு கொடுத்து வாங்குகிறோம். மூன்றாம் தூதன் எக்காளம் ஊதும்போது அவ்விதமாக நடந்தது.

## வெளி 8: 12

12. நான்காம் தூதன் எக்காளம் ஊதினான்; அப்பொழுது சூரியனில் மூன்றிலொரு பங்கும், சந்திரனில் மூன்றிலொருபங்கும், நட்சத்திரங்களில் மூன்றிலொருபங்கும் சேதப்பட்டது, அவற்றவற்றில் மூன்றிலொருபங்கு இருளடைந்தது; பகலிலும் மூன்றிலொருபங்கு பிரகாசமில்லாமற்போயிற்று, இரவிலும் அப்படியேயாயிற்று.

நான்காம் தூதன் எக்காளம் ஊதும்போது சுற்றுச்சூழல் **(environment)** பாதிக்கப்படுகிறது. காற்று மாசுபடுகிறது **(air pollution)**. பருவ நிலை மாறிவிட்டது. டெல்லியில் காற்று அதிகமாக மாசுபட்டிருப்பதால் ஒற்றைப்படை இலக்கங்கள் உள்ள கார்கள் ஒரு நாளும் இரட்டைப்படை இலக்கங்கள் உள்ள கார்கள் மறுநாளும் ஓட்டவேண்டும் என்று அறிவித்திருக்கிறார்கள். அதற்காக அரசு அந்த முயற்சியை எடுக்கிறது.

உலகமே மாசுபட்டிருக்கிறது. இந்தியாவின் சுற்றுச்சூழல் பாதிக்கப்பட்டிருக்கிறது. வெளிநாட்டிலிருந்து இங்கே வந்து தொழிற்சாலைகளை ஏற்படுத்தி இங்கே சுற்றுச்சூழலை மாசுபடுத்தி அவர்கள் நாட்டை பத்திரமாக வைக்க நினைக்கிறார்கள். இந்தியா எல்லா நாட்டவர்களையும் இங்கே தொழில் தொடங்க அழைத்து இங்கே காற்று, தண்ணீர் எல்லாம் மாசுபட்டுப்போனது.

ஏழு எக்காளங்கள் இயற்கையை பாதித்திருக்கிறது **(natural disturbances)**. அது இஸ்ரவேல் ஜனங்களைக் கொண்டுவந்திருக்கிறது. அது நம்மை வார்த்தையில் கொண்டுவந்திருக்கிறது. இவ்வளவு காரியங்கள் ஏழு எக்காளங்களில் அடங்கியிருக்கிறது. தீர்க்கதரிசி சொல்லியிருக்கிறாரா? அவர் அங்கே இங்கே சிதறி சொல்லியிருக்கிறார். அதற்குத்தான் ஒரு போதகர் தேவை. ஒரு போதகர் அதைப் பகுத்துப் போதிக்கும்போது எல்லாவற்றையும் ஒன்றுசேர்த்து உங்களுக்குச் சரியாகக் கொடுக்கிறார்.

அதன்பின்பு என்ன வாசிக்கிறோம்?

**வெளி 8: 13**

13. பின்பு, ஒரு தூதன் வானத்தின் மத்தியிலே பறந்துவரக்கண்டேன்: அவன் மகா சத்தமிட்டு: இனி எக்காளம் ஊதப்போகிற மற்ற மூன்று தூதருடைய எக்காளசத்தங்களினால் பூமியில் குடியிருக்கிறவர்களுக்கு ஐயோ, ஐயோ, ஐயோ, (ஆபத்துவரும்) என்று சொல்லக்கேட்டேன்.

இனி எக்காளம் ஊதப்போகிற மற்ற தூதருடைய எக்காள சத்தங்களினால் பூமியில் குடியிருக்கிறவர்களுக்கு ஐயோ என்று சொல்லப்பட்டிருக்கிறது. முதல் நான்கு எக்காளங்கள் குடியிருப்பிடத்தை **(habitation)** அல்லது உறைவிடத்தைப் பாதித்தது. மற்ற மூன்று எக்காளங்கள் குடியிருப்பவர்களை **(inhabitants)** பாதிக்கிறது. இது மனுஷர்களைப் பாதிக்கிறது. இனி எக்காளம் ஊதுப்போகிற, அதாவது ஐந்தாம், ஆறாம் மற்றும் ஏழாம் எக்காளங்களினால் பூமியில் குடியிருக்கிறவர்களுக்கு **(பூமிக்கு அல்ல)** ஐயோ, ஐயோ, ஐயோ ஆபத்துவரும் என்று சொல்லக்கேட்டேன். அல்லேலூயா.

**வெளி 9: 1**

1. ஐந்தாம் தூதன் எக்காளம் ஊதினான்; அப்பொழுது வானத்திலிருந்து பூமியின்மேல் விழுந்த ஒரு நட்சத்திரத்தைக் கண்டேன்; அவனுக்குப் பாதாளக்குழியின் திறவுகோல் கொடுக்கப்பட்டது.

ஐந்தாம் தூதன் எக்காளம் ஊதும்போது பாதாளக்குழி திறக்கப்பட்டு அசுத்த ஆவிகள் வருகிறது. இணைய தளங்கள் மூலமாக மனுஷனுடைய மூளை பாதிக்கப்பட்டுப்போனது. அலைப்பேசி **(mobile)**, இணைய தளங்கள் **(internet)** இதெல்லாம் நல்லதுக்காகப் பயன்படுத்தவில்லை என்றால் உங்கள் மூளைக் கெட்டுப்போகும். வெட்டுக்கிளிகள் **(**பொல்லாத ஆவிகள்**)** புறப்பட்டுவந்து மனுஷனை வேதனைப்படுத்துகிறதாய் இருக்கிறது. ஜனங்கள் சாவை விரும்புவார்கள். விரும்பியும் அதைக் காணாதிருப்பார்கள். சாகவேண்டும் என்று ஆசைப்படுவார்கள். சாவோ அவர்களுக்கு விலகி ஓடிப்போம். அவைகளுக்கு ஒரு ராஜன் உண்டு. அவன் பாதாளத்தின் தூதன். எபிரெய பாஷையிலே அபெத்தோன் **(Destruction)** என்றும், கிரேக்கு பாஷையிலே அப்பொல்லியோன் **(Destroyer)** என்றும் அவனுக்குப் பெயர். இன்றைக்கு பாதாளக்குழி திறக்கப்பட்டு அசுத்த ஆவிகள் வந்திருக்கிறது.

**வெளி 9: 13-18**

13. ஆறாம் தூதன் எக்காளம் ஊதினான்; அப்பொழுது தேவனுக்குமுன்பாக இருந்த பொற்பீடத்தின் நான்கு கொம்புகளிலுமிருந்து ஒரு சத்தந்தோன்றி,

14. எக்காளத்தைப் பிடித்திருந்த ஆறாம் தூதனை நோக்கி: ஐபிராத்தென்னும் பெரிய நதியண்டையிலே கட்டப்பட்டிருக்கிற நான்கு தூதர்களையும் அவிழ்த்துவிடு என்று சொல்லக்கேட்டேன்.

15. அப்பொழுது மனுஷரில் மூன்றிலொருபங்கைக் கொல்லும்படிக்கு ஒருமணிநேரத்திற்கும், ஒரு நாளுக்கும், ஒரு மாதத்திற்கும், ஒரு வருஷத்திற்கும் ஆயத்தமாக்கப்பட்டிருந்த அந்த நான்கு தூதர்களும் அவிழ்த்துவிடப்பட்டார்கள்.

ஆறாம் தூதன் எக்காளம் ஊதும்போது ஐபிராத்தென்னும் நதியண்டையிலே கட்டப்பட்டிருக்கிற நான்கு தூதர்களையும் அவிழ்த்துவிடு என்று சொல்லக்கேட்டேன். அப்பொழுது மனுஷரில் மூன்றிலொருபங்கைக் கொல்லும்படிக்கு ஒருமணி நேரத்திற்கும், ஒரு நாளுக்கும், ஒரு மாதத்திற்கும், ஒரு வருஷத்திற்கும் ஆயத்தமாக்கப்பட்டிருந்த அந்த நான்கு தூதர்களும் அவிழ்த்துவிடப்பட்டார்கள். ஹிட்லர் **(Hitler)**, முசோலினி **(Mussolini)**, எய்க்மேன் **(Eichmann)**, ஸ்டாலின் **(Stalin)** என்பவர்கள்தான் அந்த நான்கு தூதர்கள்.

17. குதிரைகளையும் அவைகளின் மேல் ஏறியிருந்தவர்களையும் நான் தரிசனத்தில் கண்டவிதமாவது; அவர்கள் அக்கினிநிறமும் நீலநிறமும் கந்தகநிறமுமான மார்க்கவசங்களையுடையவர்களாயிருந்தார்கள்; குதிரைகளுடைய தலைகள் சிங்கங்களின் தலைகளைப்போலிருந்தன; அவைகளுடைய வாய்களிலிருந்து அக்கினியும் புகையும் கந்தகமும் புறப்பட்டன.

18. அவைகளுடைய வாய்களிலிருந்து புறப்பட்ட அக்கினி புகை கந்தகம் என்னும் இம்மூன்றினாலும் மனுஷரில் மூன்றிலொருபங்கு கொல்லப்பட்டார்கள்.

குதிரைகளின் வாய்களிலிருந்து புறப்பட்ட அக்கினி புகை கந்தகம் என்னும் இம்மூன்றினாலும் மனுஷரில் மூன்றிலொருபங்கு கொல்லப்பட்டார்கள். அதுதான் முதலாம் உலக யுத்தம் **(I World War)**, இரண்டாம் உலக யுத்தம் **(II World War)**. அக்கினி, புகை, கந்தகத்தினாலே யூதர்கள் கொல்லப்பட்டார்கள். வெளிப்படுத்தல் 9ம் அதிகாரத்திலே இரண்டு யுத்தங்கள் சொல்லப்பட்டிருக்கிறது. ஐந்தாம் எக்காளம், ஆறாம் எக்காளம். இந்த இரண்டு யுத்தங்களும் யூதர்களை உந்தித்தள்ளி தங்கள் சொந்த தேசத்திற்குக் கொண்டுவந்திருக்கிறது. அல்லேலூயா. இதெல்லாம் எக்காளங்கள் செய்கிறது.

**வெளி 11: 15**

15. ஏழாம் தூதன் எக்காளம் ஊதினான்; அப்பொழுது உலகத்தின் ராஜ்யங்கள் நம்முடைய கர்த்தருக்கும், அவருடைய கிறிஸ்துவுக்குமுரிய ராஜ்யங்களாயின; அவர் சதாகாலங்களிலும் ராஜ்யபாரம் பண்ணுவார் என்னும் கெம்பீர சத்தங்கள் வானத்தில் உண்டாயின.

அதன்பின்பு நீங்கள் வாசிக்கும்பொழுது, ஏழாம் தூதன் எக்காளம் ஊதும்போது இந்த உலகத்தின் ராஜ்யங்களாகிய அமெரிக்கா, ரஷ்யா, ஐரோப்பா, ஆசியா, ஆஸ்திரேலியா மற்றும் எல்லா ராஜ்யங்ளும் நம்முடைய கர்த்தருக்கும் அவருடைய கிறிஸ்துவுக்குமுரிய ராஜ்யங்களாயின. ஏழாம் எக்காளம் ஆயிர வருட ஆளுகையைக் **(Millennium)** குறிக்கிறது. எலிமெலேக்கின் சுதந்தரம் **(Property)** போவாசின் சுதந்தரமாக மாறுகிறது. அல்லேலூயா. ரூத்தும் நகோமியும் இப்பொழுது மகிழவேண்டிய நேரம். எத்தனைப்பேர் எதிர்நோக்கியிருக்கிறோம்?

**வெளி 11: 18**

18. ஜாதிகள் கோபித்தார்கள், அப்பொழுது உம்முடைய கோபம் மூண்டது; மரித்தோர் நியாயத்தீர்ப்படைகிறதற்கும், தீர்க்கதரிசிகளாகிய உம்முடைய ஊழியக்காரருக்கும் பரிசுத்தவான்களுக்கும் உமது நாமத்தின்மேல் பயபக்தியாயிருந்த சிறியோர் பெரியோருக்கும் பலனளிக்கிறதற்கும், பூமியைக் கெடுத்தவர்களைக் கெடுக்கிறதற்கும், காலம் வந்தது என்று சொல்லி, தேவனைத் தொழுதுகொண்டார்கள்.

நமக்கு ஆண்டவர் பலன் அளிக்கப்போகிறார். நமக்கு ஆண்டவர் எடுத்துக்கொள்ளப்படுதலைக் கொண்டுவரப்போகிறார். நமக்கு இந்தப் பூமியைத் தரப்போகிறார். அல்லேலூயா.

ஆண்டவர் ஒவ்வொரு நாளும் நமக்கு கிருபையின் நாளாகத் தருகிறார். இந்த கிருபையின் நாட்களை நாம் பாவத்தில் செலவுபண்ணிப் போடக்கூடாது. இந்தப் பூமியைக் கெடுத்தவர்களை, ஆண்டவர் கிருபையாய்க் கொடுத்த வாழ்நாளை **(Grace Period)** பாவத்தில் செலவுபண்ணிப்போட்ட ஆத்துமாக்களை கெடுப்பதற்குக் காலம் வந்தது. ஆனால் நமக்கு பலன் அளிப்பதற்குக் காலம் வந்தது. அல்லேலூயா. இரண்டு காரியங்கள். நமக்குப் பலன் அளிக்கிறார். பூமியைக்

கெடுத்தவர்களைக் கெடுக்கிறார். தங்கள் வாழ்நாளை பாவத்தில் செலவுபண்ணினவர்கள் தப்பிக்கமுடியாது.

ஏழாம் எக்காளம் உலகத்தில் தேவனுடைய ராஜ்யத்தை மறுபடியும் நிலைநிறுத்துகிறது **(The Seventh Trumpet re establish the Kingdom of God in the world)**. அன்றைக்கு ஏதேனிலே கர்த்தருடைய ராஜ்யம் இருந்தது. மறுபடியும் இது ஏதேனாக மாறி கர்த்தருடைய ராஜ்யம் வரும்போது போவாஸ், ரூத், நகோமி அங்கே வாழுவார்கள். அல்லேலூயா. மணவாட்டியாகிய நாமும், இலட்சத்து நாற்பத்துநாலாயிரம் யூதர்களும் இயேசுகிறிஸ்துவோடுகூட இந்த உலகத்தைச் சுதந்தரித்துக்கொள்வோம். ஆயிர வருட அரசாட்சியிலே மூன்று விதமான **(Three Groups)** மக்கள் இருக்கிறார்கள். இயேசுகிறிஸ்து, அவருடைய மணவாட்டி (பழைய ஏற்பாட்டு மணவாட்டி, புதிய ஏற்பாட்டு மணவாட்டி) மற்றும் இலட்சத்து நாற்பத்துநாலாயிரம் யூதர்கள் **(Jesus Christ and His Bride and 144000 Israelites)**. இவர்கள்தான் ஆயிர வருஷ ஆளுகையில் இருப்பார்கள். வேறே யாரும் இருக்கமாட்டார்கள். எந்தப் பாவியும் **(Sinners)** இருக்கப்போகிறதில்லை. இரட்சிக்கப்பட்டு பரிசுத்த ஆவியைப் பெறாதவர்களும் **(Saved People)** அங்கே இருக்கப்போகிறதில்லை. அவர்கள் கடைசி உயிர்த்தெழுதலில் வருவார்கள்.

இப்படி ஆண்டவர் ஒரு திட்டம் **(Program)** வைத்திருக்கிறார். அவருடைய திட்டம் கண்டிப்பாக நிறைவேறும். நாம் ஒரு திட்டம் போடலாம், ஒரு கணக்குப் போடலாம் ஆனால் அது நடக்காமல் போகலாம். ஆண்டவர் போட்ட திட்டம் நிறைவேறாமற்போகாது. அந்த திட்டத்தைத்தான் இப்பொழுது நான் கர்த்தருடைய கிருபையினால் உங்களுக்குச் சொல்லியிருக்கிறேன். நாம் ஜெபம் செய்வோம்.

மீட்பின் திட்டம் **(Plan of Redemption)** நிறைவேறாமல் போகாது. யாரும் அதைத் தடுக்கமுடியாது. சாத்தான் அதைத் தடுக்கமுடியாது. உலகத்தின் மக்கள் அதைத் தடுக்கமுடியாது. கர்த்தருடைய திட்டமானது இன்றைக்கு நமக்கு வெளிப்பட்டிருக்கிறது. இதுவரைக்கும் வெளிப்படவில்லை. அவர்கள் தீர்க்கதரிசனமாகச் சொன்னார்கள். ஆனால் இன்றைக்கு நமக்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது **(Manifested in our life)**. கர்த்தர் எவ்வளவு நல்லவராக இருக்கிறார். அவருடைய வார்த்தை எவ்வளவு இனிமையாக இருக்கிறது. அது எவ்வளவு சரியாக இருக்கிறது. தேவனுடைய வார்த்தை குறைவற்றதும், அது தேனிலும் தேன்கூட்டிலிருந்து ஒழுகும் தெளிதேனிலும் மதுரமாக இருக்கிறது. அது பேதையை ஞானியாக மாற்றுகிறது. இந்த வார்த்தைகளுக்காக, அவருடைய மீட்பின் திட்டத்திற்காக, இயேசுகிறிஸ்து நமக்காகச் செய்கிற இந்த காரியங்களுக்காக, அவர் நமக்குக் கொடுத்த இந்த அனுபவத்திற்காக கர்த்தருக்கு நாம் ஸ்தோத்திரங்களை ஏறெடுப்போம்.

இயேசுகிறிஸ்து நல்லவராய் இருக்கிறார். அவர் நம்முடைய இனத்தான் மீட்பர் **(Kinsman Redeemer)**. அவர் அறுவடையின் எஜமான் **(Lord of the Harvest)**. அவர் நம்முடைய மணவாளன் **(Bridegroom)**. அவர் யூதா கோத்திரத்துச் சிங்கம் **(Lion of the tribe of Judah)**. அவர் நம்முடைய மீட்பர் **(Redeemer)**. அவர் நம்முடைய ராஜா **(King)**. எல்லாரும் கர்த்தரை நாம் துதிப்போம். இயேசுவே உமக்கு நன்றி செலுத்துகிறோம்.

எங்களை நேசிக்கிற நல்ல ஆண்டவரே, உம்மைத் துதிக்கிறோம். இந்நேரமட்டும் உம்முடைய வார்த்தையை தியானித்தோம். எங்களைக்குறித்து உம்முடைய திட்டம் என்ன, இந்த உலகத்தைக்குறித்து உம்முடைய திட்டம் என்ன, யூதர்களைக்குறித்து உம்முடைய திட்டம் என்ன, என்று எல்லாவற்றையும் இந்த ஏழு எக்காளங்களில் நாங்கள் பார்க்கிறோம். இன்றைக்கு எக்காளங்கள் ஊதப்பட்டு பூமியானது மாசுபட்டிருக்கிறது. சமுத்திரம் மாசுபட்டிருக்கிறது. நல்ல தண்ணீர் மாசுபட்டிருக்கிறது. முதலாம் உலக யுத்தமும், இரண்டாம் உலக யுத்தமும் அதிக பாதிப்பை ஏற்படுத்தியிருக்கிறது. மூன்றாம் உலக யுத்தம் வரப்போகிறது. எல்லா மனுஷருக்கும் முடிவு வரப்போகிறது. எங்களை எடுத்துக்கொள்ளப்போகிறீர். எங்களை மீட்டுக்கொண்டு யூதர்களை நீர் பெற்றுக்கொள்ளப்போகிறீர். ரூத்தை நீர் பெற்றுக்கொண்டு, நகோமியை மீட்கவேண்டிய நேரம் வந்திருக்கிறது.

கர்த்தாவே, இப்பொழுது நாங்கள் உம்மோடுகூட ஒரு அனுபவத்தைப் பெற்றுக்கொண்டிருக்கிறோம். நீர் எங்கள் ஆத்துமாவை நேசிக்கிறீர். நீர் எங்களுக்கு ஆத்தும நேசராய் இருக்கிறீர். அவ்விதமான ஒரு அன்பின் ஐக்கியத்தைத் **(Love affair)** தந்திருக்கிறீர். உலகம் இன்றைக்கு பாவத்தின் அடிமைத்தனத்தில் இருக்கும்போது நாங்கள் உம்முடைய வார்த்தைக்கு அன்பின் அடிமைகளாக மாறியிருக்கிறோம். உம்முடைய கண்களில் எங்களுக்கு தயவு கிடைத்திருக்கிறது. நீர் அருளிய எல்லா நன்மைகளுக்காக உமக்கு ஸ்தோத்திரம். எங்களுக்கு முன் வைத்திருக்கிற ஆசீர்வாதங்களுக்காக உமக்கு ஸ்தோத்திரம். நாங்கள் அதைத் தவறாமல் பெற்றுக்கொள்ள எங்களை நல்ல குணசாலியான மணவாட்டியாக **(Character Bride)** மாற்றுவீராக. வசனத்தைக்கேட்ட அனைவரையும் ஆசீர்வதியும். எங்கள்மேல் இரக்கமாயிரும். கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமென்.